Koviloor Digital Library

4-5

உ

காஞ்சி மாமுனிவரின்

அமுத மொழி 101

1993

Ac. NO: 1993
R65

நபண அன்பளிப்பு

ழ. சி. தி.

யான்பட்டி/கோவை

14, 15 ... கோவிந்தா என்றும் நாமம்

Koviloor Digital Library

உ

திரு அருளாலும், குரு அருளாலும்

எங்கள் புதல்வி
திருவளர் செல்வி

சேதுக்கரசி B.Com., (M.C.A)

☆

தேவகோட்டை திரு
உ.மு.சுப.லெ.மெ.லெ. புதல்வன்
திருவளர் செல்வன்

மெய்யப்பன் என்ற சரவணன் B.E.
(கதிர்வேல் டெக்ஸ்டைல் மில்ஸ்
(பி)லிட்.,நாச்சியாபுரம்)

ஆகியோருக்கு கண்டவராயன்பட்டி எங்கள் இல்லத்தில்
ஸ்ரீ முக ஆவணி 20உ (5.9.1993ல்) நடைபெறும்
திருமண விழாவில் வழங்கி மகிழ்ந்தது.

அழ. சி. தியாகராஜன்
தி. சீதா

Koviloor Digital Library

353

4-5

கோவிலூர் ஆதீனம்
1993
R65
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-5

1993

உ

சிவமயம்

காஞ்சி மாமுனிவரின் அமுத மொழி நூறு

நடமாடும் தெய்வம் காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ சந்திரசேகரந்திர சரஸ்வதி ஸ்வாமிகளுக்கு நூற்றாண்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவரின் அனுபவம் மிக்க, ஆழமான அருமையான ஆன்மீக அமுதத்தில் நூற்றினைத் தொகுத்தெடுத்து, எங்கள் புதல்வி திருமணத்தின் போது, உறவினர்களும், நண்பர்களும் படித்துப் பயனுறும் வண்ணம், அவர்தம் திருவடிகளைத் தொழுது இந்த நூல்வடிவில் சமர்ப்பிக்கிறோம்.

குருவின் அடிபணிந்து கூடுவ தல்லார்க்கு
அருவமாய் நிற்கும் சிவம்.

- ஔவைக் குறள்

இதை வெளியிடும் எண்ணத்தைத் தோற்றுவித்தது தபோவனம் சற்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி, பெங்களூர் ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள், (இமயமலை) ரிஷிகேஷ் சுவாமி சாந்தானந்த சரஸ்வதி இன்னும் மற்ற பெரியவர்களின் சத்சங்கம், அருள். என் தந்தையார் அமரர் அழ. சிங்காரம் செட்டியார் அவர்களின் தோன்றாத் துணை.

தினமணியில் 100 நாட்கள் வந்த இவற்றுக்கு, தகுந்த தலைப்புகள் எழுதி, அச்சிட உதவிகள் செய்த, கோவை எங்கள் சிவ குடும்பத்தினர், வைத்தியநாதன் தம்பதியினர், கோவைக் கிழார் புதல்வர் புலவர் மகாதேவன், காரைக்குடி மெ.அழகப்பன் (மதுரை வங்கி, கோவை-9) முதலியோருக்கு நன்றி.

இதை வெளியிடும் பாக்கியம் எங்களுக்கும், படிக்கும் பாக்கியம் எல்லோருக்கும் கிட்டுகிறது. இதன் பயன் அனைவருக்கும் கிடைக்க திரு அருளும், குரு அருளும் துணைபுரிவதாக

அழ. சி. தியாகராஜன்.

1993 - F.

Koviloor Digital Library

1. நல்வாழ்வுக்கு காமாக்ஷியின் பாதங்களே கதி

- ஆதிசங்கரர்

கருணைக் கடலான காமாக்ஷியின் அருள் சக்தி எத்தகையது தெரியுமா? பெரிய பெரிய ஆயுதங்களையும் தளவாடங்களையும் வெடிகளையும் வைத்துக்கொண்டு, அந்த நாடு பிடிக்கிறேன்; இந்த தேசத்தை ஜெயிக்கிறேன்; என்று வருஷக் கணக்காகப் போர் செய்கிறார்கள் அரசர்கள். ஆனால் புன்சிரிப்புக் கொண்டே, கையில் கரும்புவில்லும், புஷ்ப பாணங்களும் மட்டும் வைத்துக் கொண்டு, உலகம் முழுவதையுமே ஒரு நொடியில் தன் வலையில் வீழ்த்துகிறானே மன்மதன்! அது யார் கொடுத்த சக்தியால்? பராசக்தி, பார்வதி அளித்த அனுக்கிரகத்தினால் அல்லவா? அந்த சக்தியைக் கொடுத்து அருள் செய்த காமாக்ஷியின் பெருமையை, கீழ்கண்ட ஸௌந்தர்ய லஹரி ஸ்லோகம் சொல்லுகிறது.

தனு : பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயி பஞ்சவிசிகா;
வஸந்த: ஸாமந்தோ மலய மருதா யோதன ரத;
ததாப்யேக: ஸர்வம் ஹிமகிரி ஸுதே காம்பிக்ருபாம்
அபாங்காத்தே லப்த்வா ஜகதித மநங்கோ விஜயதே!!

- ஆதிசங்கரர்

காமானுக்கு அடிமையாகி உலகம் விருத்தியானபொழுது, அதன் அல்லல்களைப் போக்கிக் கொள்ள ஆதிசங்கர பகவத் பாதாள், காமனையும் ஜெயிக்க வழி தேடினார்கள். அதுவும் காமாக்ஷி தேவியருளால்தான் வரவேண்டும். காமன் கொடுக்கும் மோகத்தை ஒடுக்க, காமனையே தன் கண் பார்வையால், அடக்கி, அவன் வில்லைப் பறித்துத் தேவி பராசக்தி, 'காமாக்ஷி', சிவகாம சுந்தரியாக ஆகிறாள். மானிடர்களின் மனதையும், ஐந்து புலன்களையும், அவளே வில்லாகவும், மலர்களாகவும் வைத்துக் கொண்டு, காமனின் ஆதிக்கம் ஓங்காதவாறு அருள்பாலிக்கிறாள். ஆதிசங்கரர் ஸௌந்தர்ய லஹரி தோத்திரங்களால் துதித்தவண்ணம், நாமும் துதித்து, மனதை அடக்கி, உண்மையறிந்து, இவ்வுலகில் உஜ்ஜீவிக்க வேண்டும். ஆதலால் அம்பிகையின் பாத கமலங்களில் நாம் சரணாகதர்களாக அவள் கருணையை நாடவேண்டும். அவளுடைய குளிர்ச்சியான கடைக்கண் பார்வை நம்மீது பட்டவுடனேயே எத்தகைய சக்தி பெறுவோம் தெரியுமா?

2. காமாக்ஷியின் அருளும் அர்த்தமும்

காம = அன்பு அக்ஷி = கண். அன்பு பொங்கும் கண்களை உடையவள். காமாக்ஷி என்பதற்கு வேறு தத்துவார்த்தங்களும் உண்டு.

பிரமம்மாகச் செயலற்று இருந்த வஸ்துவுக்கு, லோகானுக்கிரகம் செய்ய பரமகருணை உதிப்பதைத்தான் "காமக்ஷி" என்று சொல்கிறோம். சுத்த, ஸ்படிக ஸங்காசமாக, நிறமில்லாதிருந்த பிரம்மம், அப்போது சிவப்பு நிறத்தை அடைகிறது.

Koviloor Digital Library

அன்பு, கருணை இவற்றைச் சிவப்பாகவே சொல்வது வழக்கம். ராகம் (அன்பு) - அநுராகம் என்பதிலிருந்தே, ரக்தம் (ரத்தம்) என்ற பதம் வந்தது. தமிழிலும் மனச்செம்மை, செவ்விய உள்ளம் என்றெல்லாம் சொல்கிறோம். இதுவே காமாக்ஷியின் சிறப்பு. கருணையின் வர்ணம்.

நாலு கைகளில் கரும்புவில், புஷ்பபாணம், பாசம், அங்குசம் இவற்றைத் தரித்துக் கொண்டு, நிறமே இல்லாத பிரம்மத்திலிருந்து செவேல் என்ற பரம கருணையின் நிறத்தோடு, உதய சூரியன் மாதிரி, மாதுளம் பூ மாதிரி, குங்குமப்பூ மாதிரி, செம்பருத்தி மாதிரி, காமேஸ்வரியான காமாக்ஷி, அனுக்கிரக நிமித்தம் தோன்றியிருக்கிறாள். காமாக்ஷி என்றாலே, நம் ஆசைகளைத் தன் கடாக்ஷத்தால் நிறைவேற்றுபவள் என்றும் ஓர் அர்த்தமாகும்.

3. தியானத்தால் பாவநிவர்த்தி, க்ஷேமம்

துணி அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. உடம்பு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. வீடு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. நம் மனம் அழுக்கு இல்லாமல் ஆக வேண்டும். அதற்கு அம்பாளுடைய சரணாரவிந்தத் தியானந்தான் வழி. எப்போதும் அம்பிகையைத்தான் நாம் நமஸ்கரிக்க வேண்டும். அவளுடைய தியானத்தினால்தான் சகல பாவங்களும் நிவர்த்தியாகும். சகல க்ஷேமங்களும் உண்டாகும்.

4. மன அழுக்கு நீங்க வழி

அம்பாளின் சரணத்தைத் தியானித்துக் கொண்டே இருந்தால், அழுக்கெல்லாம் போய், குறை எல்லாம் தீர்ந்து பூர்ணமாக அப்படியே நிரம்பிப் போய் விடுவோம். அழுக்கும் குறையும் உள்ள ஜீவர்களாக நாம் உண்டாகியிருப்பது அவள் விளையாட்டுத்தான். எனவே இதில் இருந்து நம்மை மீட்டு நிர்மலமாக, பூர்ணமாகப் பண்ணுவதும் அவள் காரியந்தான்.

5. குங்குமமும் நேர்வகிடும்

வகிட்டிலே அம்பாள் குங்குமம் வைத்துக் கொண்டிருக்கிறாள். அதனால்தான் அம்பாளுடைய சாந்நித்தியம் வேண்டும் என்கிறவர்கள், வகிட்டைக் கோணலும் மாணலுமாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள். நேரே நடுவில் எடுத்துக் கொள்வார்கள். அங்கே குங்குமமும் வைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் பதிவ்ரதா ஸ்திரீகளுக்குத் தெய்வ சாந்நித்தியம் உள்ள இடம். ஒவ்வொரு சரீரத்திலும் சாந்நித்தியம் உள்ள இடம். ஒவ்வொன்று இருக்கிறது. பசுமாட்டுக்குப் பின்னாலே இருக்கிறது. அதனால் அதன் பின்னால் 'கோபூஜை' பண்ணுகிறோம். யானைக்கு மஸ்தகத்தில் இருக்கிறது. வில்வத்திலே பின் பக்கம். அங்கேதான் லக்ஷ்மி வாஸம் செய்கிறாள் என்று சொல்வார்கள். அது போலவே பதிவ்ரதா ஸ்திரிகளுக்குத் தெய்வ சாந்நித்தியம் உள்ள இடம் சீமந்தம். ஆகையால் அந்த இடத்தில் குங்குமம் இட்டுக் கொள்வது வழக்கம். அப்புறம் ஸௌபாக்கியத்திற்காக, அலங்காரத்திற்காக நெற்றியிலும் வைத்துக் கொள்வார்கள்.

Koviloor Digital Library

6. அம்பாளின் அளவுகடந்த அருட்பார்வை

அம்பாளுடைய கடாக்ஷம், வெகுதூரம் விழக்கூடிய கடாக்ஷம். தாயாருடைய கடாக்ஷம் குழந்தைகளிடத்தில் விழும். பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லாப் பிராணிகளும் குழந்தைகள். எல்லாவற்றிற்கும் தாயாக இருப்பவள் ஜகன் மாதாதான். புல் பூண்டு முதற்கொண்டு எல்லாம் தேவியின் குழந்தைகள். பிரபஞ்சத்திற்கு எல்லை இல்லை. எல்லையில்லாத பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லா வஸ்துக்களிடத்திலும் அவளுடைய கடாக்ஷம் விழுவதனால், அவளுடைய பார்வையானது வெகுதூரம் நீண்டு போகிறதாம்.

வெகுதூரம் விழக்கூடிய அம்பாளுடைய குளுமையான கடாக்ஷத்திற்கு உபமானமாகப் பாதி திறந்து பாதிமறைந்திருக்கும் நல்ல நீலோத்பல புஷ்பத்தைச் சொல்கிறார், ஆதிசங்கரர். நீலோத்பலம் மிகவும் சீதளமாக இருக்கும். அம்பாளுடைய கடாக்ஷமும் குளுமையாக வெகுதூரம் நீண்டும் இருக்கும்.

7. நேர்வகிடு எடுத்து, குங்கமம் இடல் - சீமந்தம்

அம்பாளுடைய சிரஸில் ஒரு வகிடு இருக்கிறது. சிரஸின் நடுவில் போகும் ஒரு கோட்டுக்குத்தான் வகிடு என்று பெயர். தலையின் மத்தியில் கூந்தலைச் சரியாக இரண்டாகப் பிரிக்கும் படியாக, வெள்ளை வெளேர் என்று ஒரு கோடு போகும். பழைய காலத்தில் குங்குமம் வைக்கிறது என்றால் முதல் முதலில் அங்கேதான் வைத்துக் கொள்வார்கள். நெற்றியில் இட்டுக் கொள்வது அப்புறந்தான். இந்த வகிட்டுக்குத்தான் சீமந்தம் என்று பெயர். கர்ப்ப ஸ்திரீகளுக்கு எட்டாவது மாதத்தில் சீமந்தம் என்று மந்திரோக்தமாக ஒரு சடங்கு செய்வது வழக்கம். சீமந்தம் செய்வது என்றால் வகிடு பிளக்கிறது என்று அர்த்தம். கங்கணதாரணம் – வளைகாப்பு என்று ஒன்று. சீமந்தம் என்று ஒன்று.

8. காஞ்சிகாமாக்ஷி காமக் கோட்டம்

அநேக சிவஸ்தலங்களில் உள்ள அம்பாள் சந்நிதிகளுக்கு 'காம கோட்டம்' என்று பெயர் இருப்பதாக, அந்தந்த சந்நிதிகளில் உள்ள கல் வெட்டுகளிலிருந்து தெரிகிறது.

எல்லா சக்தி கோட்டங்களிலும் இருந்த ஜீவகளை காஞ்சிபுரத்திற்கு இழுக்கப்பட்டு மறுபடியும் அங்கிருந்து அந்தந்த க்ஷேத்திரத்திற்கு அனுப்பப்பட்டதாகப் புராணம் சொல்கிறதல்லவா? அதாவது இப்போது நாம் எந்த ஒரு க்ஷேத்திரத்து அம்பாள் சந்நிதியிலும் அனுபவிக்கிற சாந்நித்தியமானது, ஒரு காலத்தில் காஞ்சி காமாக்ஷியின் சந்நிதிக்கு இழுக்கப்பட்டு, பிறகு அங்கிருந்தே இந்த க்ஷேத்திரத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டதாகும்.

Koviloor Digital Library

இப்படிக் காமகோட்டத்திலிருந்தே எல்லா ஸ்தலங்களுக்கும் ஜீவகளை வந்ததால்தான், இதர ஸ்தலங்களிலுள்ள அம்பாள் சந்நிதிகளையும் 'காம கோட்டம்' என்றே குறிப்பிடுகிற வழக்கம் வந்திருக்க வேண்டும்.

9. கஷ்டம், கிரக பாதிப்பு நீங்க

காமக்ஷி சகல கஷ்டத்தையும் நிவர்த்தி பண்ணிப் பரமானந்தத்தை அளிக்கிறவள். நமக்கு ஏற்படும் கஷ்டங்களுக்கு ஜ்யோதிஷ ரீதியில் நவக்கிரஹங்களைத்தானே காரணமாகச் சொல்கிறார்கள்? இந்த நவக்கிரஹ பாதிப்பு எதுவும் அவள் பாதத்தை ஸ்மரிக்கிறவருக்கு ஏற்படாது என்று பொருள் படுமாறு, 'மூக பஞ்ச சதி' யில் ஸ்லோகம் வார்த்தை விளையாட்டுப் பண்ணியிருக்கிறது.

10. சிவம் - சக்தி

ஒரு காரியமும் இல்லாமல் தன்னைத் தானே அனுபவித்துக் கொண்டிருக்கிற பிரம்மத்தையே சிவன், சிவம் என்று சொல்கிறோம். காரியமில்லாமல், ரூபமில்லாமல், வர்ணமில்லாமல், குணமில்லாமல் இருக்கிற அந்த சாந்தமயமான பிரம்மத்திலிருந்தான் இத்தனை காரியங்கள், ரூபங்கள், வர்ணங்கள், குணங்கள் எல்லாம் உண்டாகியிருக்கின்றன. மாயா சக்தியினால் ஒரே பிரம்மம் இத்தனை உருவங்களும் குணங்களும் உள்ள பிரபஞ்சங்களாகவும் ஜீவராசிகளாகவும் தோன்றி இருக்கிறது. ஒன்றான பிரம்மத்தைப் பலவான பிரபஞ்சமாகக் காட்டுகிற அந்த மாயா சக்தியைத்தான் அம்பாள் அம்பாள் என்று சொல்கிறோம். இந்தச் சக்தியினால்தான் நாம் எல்லாம் தோன்றியிருக்கிறோம். உண்மையில் நாமும் பிரம்மத்தை தவிர வேறு இல்லை. ஆனால் வேறாக நினைக்கிறோம். இதற்குக் காரணம் பிரம்ம சக்தியான அம்பாளின் மாயைதான். இப்படி நம்மை மாயையில் போட்டு எடுப்பது அவளுடைய லீலை. ஆனால் அவள் மாயையில் நம்மைக் கட்டிப் போடுகிறவள் மட்டும் அல்ல. மனமுருகி அவளை எந்நாளும் பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தால் அவளே இந்த மாயை முழுவதையும் நீக்கி, நமக்குப் பிரம்ம ஞானத்தை அனுகிரகம் செய்வாள்.

ஞானம் பெறுவதற்கு சாஷாத் அம்பாளைத் தவிர வேறு கதி இல்லை. அவள்தான் மாயையால் ஒரே பிம்பத்தை மறைத்துப் பல்வேறான பிரபஞ்சமாகக் காட்டுகிறாள். இந்தப் பிரபஞ்ச ஆட்டத்திலிருந்து விடுதலை பெற்று, சம்சாரத்திலிருந்து ஜனன மரணச்சுழலிலிருந்து - விமோசனம் அடைந்து பிரம்மமாகவே நாம் ஆக வேண்டும் என்றால், எவள் இந்த மாயையைச் செய்தாளோ, அவளுடைய அனுக்கிரகம் ஒன்றினால்தான் முடியும். மாயா சக்தியாக இருக்கிற அம்பாளேதான் ஞானம்பிகையாக வந்து நமக்கு மோக்ஷத்தை அனுக்கிரகம் செய்கிறவளும் ஆவாள்.

Koviloor Digital Library

11. அம்பாள் காமாக்ஷியின் சிறப்பியல்பு

இதர க்ஷேத்திரங்களில் அம்பாள் சாந்நித்தியத்தை ஏற்படுத்திய காமாக்ஷி மன்மதனின வெற்றிக்கு காஞ்சியில் மட்டும் சாஸ்வதமான அடையாளம் இருக்க வேண்டும் என்று கருணை கொண்டாள். அதனால் காஞ்சிபுரத்தில் மட்டும் எந்த சிவாலயத்திலும் அம்பாள் சந்நிதி இருக்கலாகாது என்றும், மன்மதன், சிவனை ஜயித்ததற்கு அடையாளமாகக் காஞ்சிக்கு 'சிவஜித்' க்ஷேத்திரம் என்று பெயர் வழங்க வேண்டும் என்றும் உத்திரவிட்டாள்.

காஞ்சிபுரத்தில் நான்கு ராஜவீதிகள் இருக்கின்றன. அவற்றின் மத்தியில் இருக்கிற காமாக்ஷி அம்பாளுக்கு நித்திய உத்ஸவம் நடக்கும். காஞ்சிபுரத்தில் கிட்டத்தட்ட 100 தேவாலயங்கள் இருக்கின்றன. எந்தத் தேவாலயத்தில் ஸ்வாமி புறப்பட்டாலும், ஒரு மைல், இரண்டு மைல் இருந்தாலும், இங்கே வந்து அம்பாளைச் சுற்றியுள்ள நான்கு ராஜவீதிகளையும் வலம் பண்ணிக் கொண்டுதான் திரும்ப அந்த மூர்த்திகள் அந்த அந்தக் கோவிலுக்குப் போவது வழக்கம்.

12. ஈஸ்வரனின் அன்பும் - பக்தியும்- 'சிவானந்த லஹரி'

ஈஸ்வரன் குழந்தைகளாகிய நம்மெல்லாரிடமும் அன்பு கொண்டவன். நாம் அவனிடம் பிரியம் வைப்பதே பக்தியாகும். ஆதிசங்கர பகவத் பாதாள் சிவனிடம் பக்தி கொள்வதை அருமையாகச் சொல்லியிருக்கிறார். 'சிவானந்த லஹரி' ஸ்லோகங்களில், பஞ்ச முகம் கொண்ட சிவமூர்த்தி நம் உள்ளத்தில் இருந்தால் நாம் யாருக்குப் பயப்பட வேண்டும்? சிவபெருமான் புலித்தோலும், யானைத்தோலும் போர்த்திக் கொண்டிருக்க, துஷ்ட மிருகங்கள் என்ன செய்யும்? மான் சஞ்சலத்துடன் பயத்தால் அங்குமிங்கும் பார்க்கும் பிராணி. நம்மனதும் மானையொத்து எப்பொழுதும் சலனமடைவதுதான். அந்த மானையும் தனது வலக்கையில் அடக்கிக் கொண்டார் சிவபெருமான். ஆகவே மனித சஞ்சலங்களையும் அடக்கிக் காப்பவர் சிவபெருமான் என்று தெரிகிறதல்லவா? சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம் என்று நான்கு முகங்களும் நான்கு திக்குகளிலும் பார்த்திருக்க, ஈஸானம் என்ற முகம் ஆகாயத்தைப் பார்க்க. உலகம் முழுவதையுமே பரிபாலிக்கிறான் ஈசன் என்பது ஸத்யமல்லவா? இதையேதான் சிவானந்த லஹரி ஸ்லோகம் விளக்குகிறது.

13. சிவபெருமானின் சிறப்பும் பிரளயங்களும்

சிவன் சம்ஹாரமூர்த்தி என்ற பயம் வேண்டாம். சிவம் என்றால் மங்களம். மங்கள மூர்த்தியென்றே நாம் ஆனந்தப்பட்டு அவனிடம் ஐக்கியமாக வேண்டும். சம்ஹாரம் என்பது பிரளய காலம். பிரளயம் என்பது மூன்று வகைப்படும். நித்ய, நைமித்திக, அத்யாந்திகப் பிரளயங்கள்.

Koviloor Digital Library

நமது பகல் அலைச்சல்களை முடித்துக்கொண்டு நிம்மதியாய் இரவில் தூங்கும் பொழுது அதுவே நித்தியப்ப பிரளயம். ஒரு ஜீவன் வாழ்வை முடித்துக்கொண்டு மறுவாழ்வில் பிறக்க நேரிடும்பொழுது, நைமித்திகப் பிரளயம் ஏற்படுகிறது. ஜீவனின் கர்மாக்களுக்குத் தக்கபடி மறுபிறவி உண்டாகிறது.

நான்கு யுகங்கள் கொண்ட ஒரு கல்ப காலம் முடிந்தவுடன் பிரளயத்தில் மூழ்கி, எங்கும் ஆகாசமும், நீராகவும் தோன்றி 'அந்தியப் பிரளயம்' உண்டாகிறது. சுக துக்கங்களின்றும் எல்லோரையும் பரமாத்மா ஒரே காலத்தில் விடுவிக்கின்றார். அப்பொழுது, பரமாத்மா தவிர வேறொன்றும் இருப்பதில்லை. இதை நோக்கும் பொழுது, 'நான்' என்று பெருமையடித்துக் கொள்ள என்ன இருக்கிறதென்பதை உணர வேண்டும்.

14. 'கோவிந்தா' என்னும் நாமம் மிகவும் சிறந்தது.

மஹாவிஷ்ணுவுக்குப் ப்ரீதியான நாமாக்கள் பன்னிரண்டு. அவற்றில்'கோவிந்த'என்பது ஒன்றாக வருகிறது. இது தவிர மூன்றே மூன்று நாமாக்கள் மஹாவிஷ்ணுவுக்கு ரொம்பவும் விசேஷமானவை என்று எடுத்திருக்கிறார்கள். இந்த மூன்று நாமாக்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆசமனமாக மூன்று ஆசமனம் பண்ணிவிட்டு, அப்புறம் அந்தப் பன்னிரண்டு நாமாக்களைச் சொல்லி கன்னம், கண், மூக்கு, காது, புஜம், ஹ்ருதயம், சிரஸ் முதலியவைகளைத் தொட்டால் தேஹசுத்தி உண்டாகிறது. எந்தக் கர்மாவானாலும் முதலில் இப்படிச் செய்து சரீரத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். மூன்று முறை ஆசமனம் செய்கிறபோது சொல்கிற நாமாக்கள் 'அச்யுத,அனந்த,கோவிந்த' என்கிறவையே.

இப்படியாக விசேஷமான பன்னிரண்டு நாமாக்கள் அதனிலும் விசேஷமான மூன்று நாமாக்கள். இரண்டிலும் வருகிற ஒரே நாமம் 'கோவிந்த' என்பதுதான்.

கேசவ - நாராயண - மாதவ - கோவிந்த விஷ்ணு - மதுஸூதன - த்ரிவிக்ரம - வாமன - ஸ்ரீதர - ஹ்ருஷீகேச - பத்மநாபா - தாமோதரா.அச்யுத, அனந்த, கோவிந்த மூன்றிலே ஒரு நாமாவாக இருக்கப்பட்ட கோவிந்த என்பதை 'பஜகோவிந்தம், பஜகோவிந்தம், பஜகோவிந்தம்' என்றும் மூன்றும் தரம் ஆசார்யாள் சொல்லி ஸந்தோஷப்பட்டிருக்கிறார். ஒன்றை ஸத்ய பிரமாணமாகச் சொல்ல வேண்டுமானால் மூன்று தரம் திருப்பிச் சொல்வார்கள்.

15. ஆண்டாளும் 'கோவிந்தா' எனும் நாமமும்

ஆச்சார்யாள் சொன்னது மட்டுமல்லாமல் ஆண்டாளும் மூன்று இடங்களில் 'கோவிந்த' நாமாவை பிரயோகித்திருக்கிறாள், அவளுடைய திருப்பாவையிலே. திருப்பாவையின் கடைசியான முப்பதாவது பாட்டு. அதற்குப் பலஸ்ருதி. அதை விட்டுவிட்டால் அதற்கு முந்தைய மூன்று பாட்டுகளிலும் 'கோவிந்தா' என்றே பகவானைக் கூப்பிட்டிருக்கிறாள். இருப்பத்தேழாவது பாட்டில் 'கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா' என்கிறாள். இருபத்தெட்டாவதில்தான் 'குறைவொன்றுமில்லாத கோவிந்தா' என்பது.

Koviloor Digital Library

இருப்பத்தொன்பதாவது பாட்டில் 'இவற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா' என்கிறார்கள்.

16. நம்மைக் கரை சேர்ப்பது - 'ராம நாமம்'

தாரகம் என்றால் கடத்துவிப்பது, படகிலே வைத்து ஓட்டிக் கொண்டுபோய் அக்கரை சேர்ப்பது என்று அர்த்தம். ப்ரணவத்தையும், ராமநாமாவையும் தாரக மந்திரம் என்று சொல்வது வழக்கம். 'தாரகநாமா' என்று தியாகராஜர் கூட ராமச்சந்திர மூர்த்தியைத் தாபத்தோடு கூப்பிட்டுப் பாடியிருக்கிறார். ஸ்ம்ஸாரக் கடலில் விழுந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிற நம்மைப் படகிலே தூக்கிக் போட்டுக் கொண்டு பரமபதமான அக்கரையில் கொண்டு போய்ச் சேர்ப்பதுதான் தாரக மந்திரம்.

ஸ்ரீராம ஜயராம ஜய ஜயராம!

17. வேதங்களும் இராமாயணமும்

தர்மத்தை காக்கும் பொருட்டு பரமாத்மா ஸ்ரீ ராமனாக அவதரித்தார். வேதங்களும் கூடவே அவருடன் வந்துவிட்டன. பிராசேதஸ் புத்ரனான வால்மீகி மஹரிஷியால் அந்த வேதங்கள் ராமாயண மூலமாகச் சொல்லப்பட்டன. ஆதலால் ராமாயணமே வேத உண்மைகளை உரைக்கின்றன என்பது அறியப்பட வேண்டும். நாம் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் வேதங்கள் உரைக்கின்றன. யாக யக்ஞங்கள், ஹோமம், தான தர்மங்கள் விரிவாகச் சொல்லப்படுகின்றன.

18. இராமாயணமும் தர்மங்களும்

வேதங்கள் சொல்லும் பரம புருஷன் பூர்ணமானவன். முழுமையாக மேம்பாடுடையவன். அவனே ஸ்ரீராமன். ஒரு குறையும் சொல்ல இயலாது. அத்தகைய ஸ்ரீராமனை ஆஸ்ரயித்தான் வேத சாஸ்திர பண்டிதனான ஆஞ்சநேயன். பிரம்மச்சரிய விரதத்தினால் ராம நாம ஸ்மரணமான தாரக மந்திரத்தை ஜபித்தார். ஆஞ்சநேயன். அரச நீதி, தாய் தந்தையர், சகோதர்கள், மித்திரர்கள், சாதுக்கள், சத்துருக்கள், போர் தர்மங்கள், சரணாகதம் முதலிய பலவித தர்மங்களும் ராமாயணத்தில் சொல்லப்படுகின்றன. அதில் சொல்லப்படாத தர்மம் ஒன்றுமில்லை.

19. வேதமும் பெண்டிரும்

பிரம்மச்சாரி தான்மட்டில் தன் ஆஸ்ரம தர்மத்தைப் பண்ணுகிறான். ஸந்நியாசியும் அப்படியே. கிருஹஸ்தாச்ரமி மட்டும். தனியாளாக இல்லாமல், பத்தினியுடன் சேர்ந்தே தன் தர்மத்தை, கர்மங்களைப் பண்ண வேண்டும்

Koviloor Digital Library

என்று சாஸ்திரம் வைத்திருக்கிறது. புருஷன். மனைவி இருவருக்கும் இது பொது சொத்து. பத்தினி இருக்கிற கிரஹஸ்தனுக்கு மட்டுமே யாக யக்ஞாதிகளை சாஸ்திரங்களில் வைத்திருக்கிறது. இந்திரிய ஸௌக்கியத்திற்காக மட்டுமே பத்தினி என்றால், பத்தினி இறந்துவிட்டால் ஒருத்தன் யக்ஞம் பண்ணக்கூடாது என்று வைத்திருக்குமா? அவள் பக்கத்திலே நின்றால்தான் இவன் யக்ஞம் பண்ணலாம். கர்த்தாவாக அவனே நேரே யக்ஞம் பண்ண 'ரைட்' இல்லை என்பதை மட்டும் கவனிக்கும் பெண் விடுதலைக்காரர்கள் அவள் இல்லாவிட்டால் இவனுக்கும் அந்த 'ரைட்' போய்விடுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும். வேதத்திலேயே 'பத்தினி வதஸ்ய அக்னி ஹோத்ரம் பவதி' என்று விதித்திருக்கிறது. தர்மத்துக்கும், கர்மத்துக்கும் கை கொடுப்பவளாக அப்படிப்பட்ட ஓர் உயர்ந்த ஸ்தானம். நம்முடைய சாஸ்திரங்களில் ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

20. முருகன் - சோமஸ்கந்த மூர்த்தம் - ஸத்சித் -ஆனந்தம்.

'முருகன்' 'முருகன்' என்பது தமிழ்நாட்டில் வழங்குகிறது வெகு சிறப்பான பெயர். 'முருகன்' என்றால் 'அழகானவன்' என்றும் 'இனிமை நலம் மாறாத சௌந்தர்யம் வாய்ந்தவன்' என்பதே அர்த்தம்.

அழகு என்றால் அது வெறும் சரீர அழகா? அருளின் அழகுதான் இப்படி தேக காந்தியாக வந்திருக்கிறது. பரமேசுவரன் அம்பாள் சம்பந்தத்தோடு இப்படிக்குமாரனாக ஆவிர்பவித்தபோது வீரம், ஞானம், சௌந்தர்யம் இவற்றோடு அருளிலும் அதிகப் பிராகசத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஸத் - சித் - ஆனந்தம் என்று சொல்வார்கள். அதுதான் பரம்பொருள். இதிலே ஸத் (இருப்பு) பரமேசுவரன்; இருக்கிறோம் என்பதை உணர்ந்து சக்தியைக் காட்டுகிற 'சித்' அம்பாள்; இப்படி உணர்ந்ததில் பேரானந்தம் பிறக்கிறது. இந்த ஆனந்தமே சுப்ரமண்யர், சிவம் என்கிற மங்களமும், அம்பாள் என்கிற காருண்யமும் கலந்த பரம உத்கிருஷ்டமான ஸ்தானம் அவர். சச்சிதானந்தத்தையே 'சோமாஸ்கந்தர்'என்று தமிழ்நாட்டுச் சிவாலயங்களில் எல்லாம் வைத்து உற்சவம் நடத்துகிறோம். ஈசுவரனுக்கும் அம்பாளுக்கும் நடுவே, இருவருக்கும் பொதுவான மத்ய ஸ்தானமாக, சுப்ரமண்யர் குழந்தை ரூபத்தில் இருப்பார், உமையோடும், ஸ்கந்தனோடும் கூடியவர் (ஸஹ உமா ஸ்கந்தர்) தான் சோமாஸ்கந்தரான பரமேஸ்வரன். 'பிள்ளையார்' என்று விக்னேசுவரரையே சொல்கிறபோதிலும் 'குமரன்' என்று சிறப்பிக்கப்படுகிற இளைய பிள்ளையை மட்டும் தாய் தந்தையரோடு வைத்து மூன்று மூர்த்தியாகச் செய்திருக்கிறார்கள். 'பிள்ளை என்றால் இவன்தான்' என்று எல்லோரும் பெருமைப்படுகிற மாதிரி, பிதாவே பெருமைப்பட்டுத் தோல்வியை ஒப்புக்கொள்கிற மாதிரி, இப்படி உத்தம அம்சங்கள் எல்லாவற்றிலும் உச்சமாக இருக்கிறார் சுப்ரமண்யஸ்வாமி.

Koviloor Digital Library

21. அருள் சக்தியை பெற வழி

'எல்லா உயிர்களும் ஒன்றே; எல்லாவற்றிலும் ஈஸ்வரன் இருக்கிறான்'என்று ஒருவன் உணர்கிறபோதுதான் அவனுக்கு அருள் உண்டாகிறது. 'நாம் பெரியவர், உபகாரம் பண்ணுகிறோம்' என்ற அகந்தையே இல்லாமல் சமஸ்தப் பிராணிகளிடமும் ஈஸ்வர ஆராதனையாக அன்பைச் செலுத்துகிறபோது, அதுவே இவனை சகல பிராணிகளுக்கும் மேலே உயர்த்தி விடுகிறது. இவனுடைய அன்பு வெறும் பேச்சாகவும், எண்ணமாகவும் மட்டுமில்லாமல் காரியத்திலேயே ஈஸ்வரானுக்ரஹத்தை வாங்கித் தரக்கூடிய அருள் சக்தியைப் பெற்றுவிடுகிறது.

22. உண்மை ஞானமும் கலையும்

மருந்தோடு பத்தியமும் முக்கியம். வித்யை என்கிற மருந்துக்கு அடக்கம் விநயம் என்கிற பத்தியம் அவசியம். அந்தப் பத்தியம் இல்லாததால் மருந்தே விஷமாயிருக்கிறது. ஆனால் அடக்கத்தோடு பயின்றால் வித்யைதான் உண்மையில் ஞானம் தரும் அமிருதமாகும். அதனால்தான் ஞான மூர்த்திகளான தக்ஷிணாமூர்த்தி, சரஸ்வதி இரண்டு பேரையுமே வித்யா தேவதைகளாகவும் வைத்திருக்கிறார்கள். சரஸ்வதி, தக்ஷிணாமூர்த்தி இருவரும், அக்ஷமாலை, சுவடி இவற்றோடு, சந்திரகலையைத் தலையில் தரித்திருக்கிறார்கள். அதற்குப் பேரே'கலை' கலை என்றால், எது வளருகிறதோ அது. வித்யைக்கு முடிவு இல்லை. 'கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்று சரஸ்வதியே விநயத்தோடு நினைக்கிறாளாம். இவள் தலையில் வைத்திருப்பது மூன்றாம் பிறை. அது பூர்ண சந்திரனாக வளர வேண்டும்.

23. சரஸ்வதியும் தக்ஷிணாமூர்த்தியும்

சரஸ்வதிக்கும் தக்ஷிணாமூர்த்தியைப் போலவே நெற்றிக்கண் உண்டு. ஆசை பஸ்பமானாலொழிய ஞானமில்லை. அதற்காகத்தான் காமனை எரித்த நெற்றிக்கண் இவளிடமும் இருக்கிறது. இவ்விரண்டு தெய்வங்களுக்கும் ஜடா மகுடம் இருக்கிறது. அதுவும் ஞானிகளின் அடையாளம்.

இருவருமே வெள்ளை வெளேரென்று இருக்கிறார்கள். ஏழு வர்ணங்களில் சேராத வெள்ளை, பரம நிர்மலமான சுத்த ஸ்வத நிலையைக் குறிப்பது. இந்த வெள்ளையும்கூட, இன்னும் நிர்மலமாக தன் வழியாக ஒளி ஊடுருவிச் செல்கிற அளவுக்குத் (Transparent) தெளிந்துவிடுகிறபோது, ஸ்படிகமாகிறது. தக்ஷிணாமூர்த்தி, சரஸ்வதி இருவருமே இப்படிப்பட்ட ஸ்படிகத்தினாலான அக்ஷமாலையைத்தான் வைத்திருக்கிறார்கள். வெள்ளை நிறம், சந்திரகலை, ஸ்படிகமாலை ஆகிய இவற்றை நினைத்தாலே நமக்கு ஒரு தூய்மை, தாபசாந்தி அமைதி எல்லாம் உண்டாகின்றன.

Koviloor Digital Library

24. கல்வியும் பக்தியும்

கல்வியென்பது கடவுளை ஆராதிப்பதில்தான் ஆரம்பம் ஆகிறது. திருவள்ளுவர் தமது குறள் நீதிகளை கடவுள் வாழ்த்தில்தான் ஆரம்பிக்கிறார்.

'அகர முதல வெழுத் தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே யுலகு'

கல்விக்கூடங்கள் கோயில்கள் போல், பெருமைபெற வேண்டும். கல்விக்கூடங்களையும், கோவில்களையும் நன்கு பராமரித்தால், தானே சுபிட்சம் உண்டாகிவிடும். கல்விக்கூடங்களில் முதன்மைச் சிறப்பை வேதம், தர்மம் பரப்பும் வேத பாடசாலைகளும் பெற வேண்டும். வேதம், சாஸ்திரம், பக்தி பரப்பும் காரியங்களில் நாணமோ அச்சமோ கூடாது.

25. கல்வி - பண்பு (Culture) நாவடக்கம்

கல்வி பெற்றவர்கள்தான் Cultured ஆக நாகரிகமுள்ளவர்களாக இருப்பார்கள். இங்கே கல்வி என்கிற போது எழுதப்படிக்கத் தெரிவதைச் சொன்னதாக அர்த்தமில்லை. நல்ல விஷய ஞானம்தான் கல்வி. அதை 'வித்யா'என்று சொல்வார்கள். அந்த வித்யையின் வாஸ்தவமான ப்ரயோஜனம் நமக்கு விஷய ஞானம் வந்துவிட்டது என்ற திமிர் பிடித்து அலையாமல் 'இன்னமும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது' என்று அடங்கி விநயமாக இருப்பதுதான்.

26. ஆலிலையும் பசுவின் வெண்ணையும் - சிறப்பு

ஆலிலைக்கு ஒரு விசேஷமுண்டு. அதிலே ஜீவசாரம் ரொம்ப அதிகம். அதனால்தான் அது எத்தனை வாடினாலும் மற்ற இலைகள் மாதிரி வற்றிப்போய் நொறுங்குவதில்லை. சருகாகிறபோது கூட மெத்தென்றே இருக்கும். அதனாலேயே பகவான் குழந்தையாக வருகிற போதும் மேலும் சொகுசாக உள்ள தனக்கு மெத்தையாக அதை 'தூஸ்' பண்ணிக் கொண்டிருக்கிறான். மரத்திலிருந்து வாடி உதிர்ந்த ஒரு ஆலிலையின் மேல் கொஞ்சம் ஜலத்தை தெளித்தால் போதும். மறுபடி அது பசுமை பெற்றுவிடுவதைப் பார்க்கலாம். பசுமைக்காகவே பசுவின் வெண்ணெய் சாப்பிடுபவன் இதில் சயனம் செய்வது ஏன்?

சம்சார சாகரத்தில் அலை பாய்கிற நமக்கு ஆலிலையைக் காட்டி நிலையான நித்யத்வத்தை, நிராலம்ப தத்வத்தை உணர்த்துகிறான்.

ஆல மரத்தை விட எத்தனையோ அகன்ற, அகண்ட தத்துவம் அவன். அந்த மரம் எத்தனை பெரிசாயிருந்தாலும், எத்தனை காலமிருந்தாலும் அதன் பரப்புக்கு எல்லை உண்டு. அதன் காலத்துக்கும் முடிவு உண்டு. அவனோ முடிவேயில்லாத அகண்டன், அனந்தன். ஆனாலும் இந்த மஹாப்ரபாவத்தை

Koviloor Digital Library

மறைத்துக் கொண்டு, நாம் அவனை எடுத்து வைத்துக் கொண்டு கொஞ்சுகிற விதத்தில் சரள சுபாவத்துடன் கூடிய குழந்தையாக இருக்கிறான். 'ஒண்ணும் கவலைப்படாதேயப்பா! என்மாதிரி குழந்தை உள்ளத்தோடு இரு. சம்சார வெள்ளத்திலேயே அப்போது நீ அலையில் அடிபடாமல் உன்பாட்டுக்கு ஆனந்தமாக, அதை ஒரு விளையாட்டாக எடுத்துக் கொண்டு மிதந்து கொண்டிருக்கலாம்' என்று சொல்லாமல் சொல்கிறான். சிலுப்புவதாலே கொந்தளிக்கிற மோரிலே வெண்ணெய் பட்டுக்கொள்ளாமல் மிதப்பதுபோல, சம்சார சாகரத்தில் அவனே வெண்ணெய்க் கட்டியாக மிதப்பது நாமும் அப்படி ஆகவேண்டும் என்று நம்மை நினைத்துச் செய்வதற்குத்தான்.

27. கர்மம் - பக்தி - ஞானம் - கீதை

கீதையில் பகவான் கிருஷ்ணன் உபதேசிக்கையில் 'நீ உன் கடமையைச் செய்; பலனை நினைக்காதே; அதுவாக வந்து சேரும்'என்று கர்மயோகப் பகுதியில் சொல்கிறார். மற்றோரிடத்தில், பக்தி யோகத்தில்' நீ உன் செயல்களையெல்லாம் ஒடுக்கிக் கொண்டு ஏகாந்தப் பிரதேசத்தில் ஒதுங்கி சும்மாயிரு' என்கிறார். மாறான உபதேசங்களாயிருக்கின்றன. இதன் தத்துவத்தைக் கவனிக்க வேண்டும் கர்மம், பக்தி, ஞானம் என்னும் முத்துறைகளில் எதைச் செய்தாலும் மற்றிரண்டும் உபகரணமானவை. ஞானமாகிற விவேகத்துடன் செய்யவேண்டும்.

28.நன்னடத்தையும்யோகப்பயிற்ச்சியும்.

ஒருவன் தன் மனதை நேர்வழியில் நிலைப்படுத்த இன்ப துன்பங்களில் ஒட்டாதவனாய் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாதது போல் நின்று வேத நெறிகளில் சொல்லியபடி, கடும்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். நன்நடத்தை முதற்படி. இது மனம் சம்பந்தப்பட்ட யோகபயிற்சியாகும். உடல் யோகப்பயிற்சி வேறு. இந்த மனநிலையை பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணன்

யம் லப்த்வா சாபரம் லாபம்
மன்யதே நாதிகம் தத:!
யஸ்மின் ஸ்திதோ நதுக்கேன
குருணா அபிவிசால்யதே!!

என்று சொல்கிறார்.

29. காமகோட்டி 'வேறு'

'காமகோடி' வேறு 'காமகோட்டி' வேறு 'காமாக்ஷியின்' இருப்பிடமான கோட்டம் காம கோட்டம். காமங்கள் எல்லாம் முடிந்து போகிற கோடியாக, அதாவது ஞானஸ்வரூபமாக இருப்பது காமகோடி. காமாக்ஷியேதான் காமகோடி. மூர்த்தியாகச் சொல்லுகிறபோது காமாக்ஷி. பீடமாகச் சொல்லும்போது காமகோடி. காமாக்ஷி சன்னதியில் காமகோடி பீடம் இருக்கிறது.

Koviloor Digital Library

30. குருவின் முக்கியத்துவம்

ஆசார்யன் கிடைத்துவிட்டால் போதும், ஸ்வாமி கூட வேண்டாம். ஸ்வாமி கூட ஆசார்யனுக்கு சமதையில்லை என்று பக்தி பண்ணினவர்கள் எல்லா சம்ப்ரதாயத்திலும் உண்டு.

பவருஹவுஸிலிருக்கும் எலெக்ட்ரிஸிடி நம் அகத்து பல்பில் எரிகிறது என்றால், அதையும், இதையும் கனெட் பண்ண ஒயர் (wire) இருந்தாக வேண்டும். ரெட்ஹில்ஸ் ஜலம் நம் அகத்தில் கொட்டுகிறது என்றால் இரண்டையும் கனெக்ட் செய்யப் பைப்லைன் இருந்தாகணும். இப்படியே குருவினால் சிஷ்யனுக்குப் புத்திப்பிரகாசம், அறிவு தாரை உண்டாகிறது என்றால் அவரையும், இவனையும் சேர்த்து வைக்க ஒரு'லிங்க்' இருக்கத்தானே வேண்டும்.

குரு வாயால் விஷயங்களை விளக்கினால் அந்தப் பேச்சு ஒரு லிங்க் -வாழ்க்கை உதாரணத்தால் புரிய வைத்தால் இதுவும் ஒருவித கம்யூனிகேஷன்தானே? ஆனதால் இதையும் ஒரு லிங்க் என்று சொல்லவேண்டும். வெளிப்படத் தெரிவித்தாலும் உள்ளர்த்தமாகக் காட்டினாலும் சிஷ்யனுடய அறியாமை போவதற்காக குரு பண்ணுகிற எதையும் உபதேசம் என்றே சொல்லவேண்டும்.

31. மனதியும் நீதிகளும்

இப்பொழுது காலம் மாறுகிறது. சலன புத்தி ஏற்படுகிறது. இப்பொழுது எவ்வளவு சௌகரியங்களிருப்பினும், முன்னேற்றங்கள் வந்தாலும் அறுசுவை உண்டியில் விஷம் கலந்தால் எப்படியோ, அப்படித்தானாகும் மனிதத் தன்மையை இழந்துவிட்டால், மனது அமைதி அடையாவிட்டால். ஆகையால் ஒரு பக்கம் சந்திரலோகம் போகும் சாமர்த்தியம் பெற்றாலும், மறுபக்கம் மகா பாரதகாலத்தின் நீதிகளைப் போற்றவும் நடத்தவும் வேண்டும்.

32. வேத தர்மம் அடிப்பையானது

நமது அனுஷ்டானங்களுக்கும் சைவ வைஷ்ணவ மார்க்கங்களுக்கும் வேதமே அடிப்படையாகும். மிகப்புராதன காலத்திலும், பலபெரியோர்களும் மஹரிஷிகளும் தெளிந்தறிந்த ஞானமொழிகளே வேதமாகும். இமயமலை போல நிற்கும் வேத சாஸ்திரங்களில் தர்மங்கள் நதிகளாக ஓடுகின்றன. அவரவருக்கேற்ற சௌகரியமான இடங்களில், நதிகளில் ஸ்நானங்கள் செய்யலாம். அந்த ஸ்நானக் கட்டங்களே பலவிதமான ஹிந்து மதக்கோட்பாடுகள். எல்லாம் ஒரே நன்னெறியைத்தான் காட்டுகின்றன. வேத நெறிகளெல்லாம் முன்காலத்தில் கதைகளாகவும் பாட்டுகளாகவும் கேட்டுகப்பட்டு வந்தன. இவ்விதம் வேததர்மம் வாய்மொழியாக, தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது.

Koviloor Digital Library

33. மனத்தூய்மையும் மரண பயமின்மையும்

ஆத்மயோகத்தால் மனம் தூய்மை பெறும்பொழுது ஒளியுண்டாகி தீயசக்திகள் மறைந்து விடுகின்றன. அப்பொழுது மரணம் வந்தாலும் மரணபயம் வராது. புன்சிரிப்போடு மரணத்தை ஏற்பான்; பின்னர் பிறவியில்லாமலேயே புன்சிரிப்புடனிருப்பான். இதுதான் மனோவலிமையான யோகம். நான்கு வேதங்களைக் கற்றறிந்து நெறியுடன் நடந்தால் மனோவலிமை ஏற்பட்டுவிடும்.

34. எல்லாமே அவன் செயல்

வேதத்தின் சக்தியே. ஒருவிதமான ஆடம்பரமில்லாமல் ஜனங்களை ஒன்றுபடச் செய்யும். வேததர்மங்களே, ஞானமே உலகத்தில் நிலைபெற்று நிற்கும். அவ்வகை அனுஷ்டானங்களைச் செய்தாலே பொதுவாக எல்லாரும் சேர்ந்து செய்யும் தர்மத்தின் பலனான உலக க்ஷேமம் ஏற்படும். வேத தர்மங்கள் அறிந்தவர்கள்தான் மகான்கள். கபீர்தாஸ், துளஸிதாஸ் முதலானோர். மஸ்தான் சாகிபு போன்ற முகம்மதியர்கள் இதன் வழிகற்றறிந்தவர்கள்தான். இடையூறுகள் நேரிடலாம். கடவுள் சோதனைகள் கொடுப்பார். பூகம்பங்கள், வெள்ளங்கள், வியாதிகள் வரலாம். ஆனாலும் கடவுளிடமும் வேதத்தினிடமும் நம்பிக்கை போகக்கூடாது. கூடவே புது மார்க்கங்கள் தோன்றும். அவுரங்கசீப்பின் கொடுமையைச் சாமாளிக்கச் சத்ரபதி சிவாஜி தோன்றவில்லையா? கடவுள் பயத்தையும் உண்டு பண்ணுபவர், பயத்தைப் போக்கும் மார்க்கத்தையும் காட்டுவார். ஆதலால் எல்லாம் அவன் செயலே! என்று நமது அனுஷ்டானங்களைத் தொடர்ந்து செய்வதுதான் யுக்தமானது. அவனே வேதத்தைக் காக்கும் புருஷோத்தமன் ஆவான். அவனை எந்தத் தீமையும், துன்பமும் அணுகாது.

35. மனதை ஒருமுகப்படுத்தவேண்டும்

மனசை நிற்கப் பண்ணுவதற்குப் பூர்வாங்கமாக அதை நாலா திசையிலும் வெறி நாய் மாதிரி ஓடிக்கொண்டிருக்காமல் முதலில் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு அவரவரும் ஸ்வதர்மப்படி கர்மா செய்து கொண்டே இருக்க வேண்டும். நமக்கென்று வாய்த்திருக்கிற கர்மாவை அவரவரும் பண்ணிக் கொண்டிருப்பது சித்த சுத்தியைத் தரும் என்பதால் ஆசார்யாள் கர்மானுஷ்டானங்களை நம் எல்லோருக்கும் விதித்திருக்கிறார். கர்மா என்பது ஓரளவுக்கு மனசை மறந்து செய்கிற காரியம். வேலையிலேயே நம் குறி இருப்பதால் சித்தம் தறிகெட்டு ஓடிக்கொண்டிருக்க விடாமல் பண்ணுகிறோம். இம்மாதிரி மனசை மறந்து (Ignore பண்ணி) கார்யம் பண்ணுவதோடு அதை நல்லதிலேயே பழக்கி, முழுக்கு, ஒருமுகப்படுத்த வேண்டும். மனசுக்கு ஐகாக்ரியம் (ஒருமுகப்படுதல்) ஏற்பட ஏற்படத்தான் அது அடங்கி, அப்படியே ஆத்மாவில் கரைந்துவிட வழி உண்டாகும்.

Koviloor Digital Library

36. காமகுரோதம் தவிர்த்தல் - ஞானம் சுரக்கவழி - கீதை

காமம் க்ரோதம் வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் பயம், சோகம் என்பனவும் சேர்ந்துவிடும். பிறகு மீள முடியாது. காமக்ரோதங்களைத் தடுத்தால், சுக துக்கங்களில் ஒட்டாமலிருப்போம். பரமாத்ம த்யானம் செய்து யோகத்திலிருப்பது உதவியாயிருக்கும். ஞானம் சுரக்கும், நாம் இந்த ஜன்மத்திலேயே முக்தியடையலாம். இதைத்தான் கிருஷ்ண பகவான் கீதையில் கீழுள்ள ஸ்லோகத்தில்

'சக்தோதீ ஹைவய: ஸோடும் ப்ராக் சரீர விமோஷணாத்!

க்ரமக்ரோத்பவம் வேகம்ஸயுக்த :ஸஸுகீ நர:!!'

அர்ஜுனனுக்கு எடுத்துறைக்கிறார்.

37. ஆசை - மனசு - கட்டுப்பாடு - அன்பு

நம் மனசு ஏதோ ஒரு சந்தோஷ லாபத்தை அடைந்து அந்த அனுபோகத்தில் இன்னும் கொழுத்துப் போவதற்கு உதவும் எல்லாப் பிரியங்களும் காமத்தைச் சேர்ந்தவையே தவிர அன்பைச் சேர்ந்தவை அல்ல.

மனசின் கொழுப்பை இளக்கி, அது பிற்பாடு அப்படியே கரைந்து போய்விடுவற்கு வசதியாக அது எதை மிருதுவாக்கித் தருகிறதோ அதுதான் அன்பு.

ஒன்று இல்லாமல் போவதற்கு முன்னாடி கொஞ்சம் கொஞ்சமாக இலேசாகி, பரவிக்கொண்டே போகவேண்டும். அப்புறம்தான் அகண்டத்தில் அரூபமாக அப்படியே கரைந்து மறைந்து போவது. ஐஸ் ஆவியாகி, இலேசாகிப் பரவிக் கொண்டே போனால்தான் இல்லாமல் போகிறது. அப்படித்தான் மனசு இலேசாகிப் பரவுவதற்கு அன்பு என்று பெயர். காமத்திலே (ஆசையிலே) என்ன ஆகிறதென்றால், இலேசான ஆவியாவதற்குப் பதில், கனமாகிக் கெட்டிப்பட்டு ஐஸ் / கட்டி மாதிரி ஆகிவிடுகிறது. ஐஸாவது உருகுகிற ஸ்வபாவமுள்ளதாக இருக்கிறது. ஆசை வாய்ப்பட்ட மனசோ உருகாத ஐஸாக ஆகிவிடுகிறது.

38. மனக் கட்டுப்பாடு - நல்வழி செலுத்தல் - அத்வைதம்

மனசு கவடு விட்டுக்கொண்டு நானாவித ருசி பேதங்களில் போனாலும் அதன் இயற்கையிலேயே அதைவிட்டுப் பிடித்துக் கொஞ்சம் கொஞ்சமாக வழிக்குக் கொண்டு வந்து ஒன்றிலேயே அமுக்கிப் போடுவதற்கில்லை. இப்படி வற்புறுத்திப் பண்ணினால் மனசின் இயற்கைப் படி அது ஈடு கொடுக்க முடியாமல் திணறி, தமிறிக் கஷ்டப்பட்டுக் கொண்டு முடிவிலே ஜடம் மாதிரியோ, இல்லாவிட்டால் எதிர் திசையில் வெறித்தனமாகவோ தான் போகும். அதனால் நமது மதம் செய்கிற முதல் காரியம், நானாவிதமான

Koviloor Digital Library

தெய்விக ருசிகளைக் காட்டி சந்தோஷப்படுத்தி, அந்த மனசின் அழுக்கை எடுத்துத் தெளிவு பண்ணுவதுதான். இப்படி நன்றாக அழுக்குப் போய், தெளிந்த தெளிவாக ஆகிப் பக்குவப் பட்ட அப்புறம், முடிவில்தான் நானா தினுசு என்கிறத்வைத அனுபவங்களை விட்டு, ஒன்றேயான அத்வைதம் என்று கொண்டு போவது.

39. பரோபகாரமான ஜீவ காருண்யம் - சரணாகதி - ஈஸ்வர அனுக்கிரகம்

ஈசிவர அனுக்கிரகம் வேண்டும் என்றால் அது எப்படி வரும்? பரோபகாரமா ஜீவ காருண்யமான நல்ல காரியங்களைச் செய்து மனசு பக்குவப்பட்டதால்தான் சித்த சுத்தி உண்டாகி, அந்த சுத்தமான சித்தத்தில் ஜலத்தில் பிம்பம் தெரியாதது போல நாம் மனைக் கலக்கிக் கொண்டு, ஈஸ்வர ஸ்வரூபம் தெரியாதபடி செய்து கொண்டிருக்கிறோம். பகவத் பக்தியோடு, பரோபாகாரமும் செய்து மனசு தெளிவாகும் போது ஈஸ்வரானுக்கிரகத்தை நாம் கிரகித்துக் கொள்ள முடியும்.

'நீ எப்படி விட்டாயோ அப்படி ஆகட்டும்'என்று சரணாகதி செய்வதுதான் பக்தி. தனக்கு என்று எதுவுமே இல்லாவிட்டால் மனசின் அழுக்குகள் நீங்கி, அது கண்ணாடி மாதிரி சுத்தமாக இருக்கும். அப்போது நிறைந்து ஆன்ந்தமாக இருக்கலாம்.

40. இறைவனிடம் அன்பு

பக்தி செய்வதற்கு இன்னொரு முக்கிய காரணம்: அன்பு செலுத்தாமல் வாழ்ந்தால் அதில் ஆனந்தமே இல்லை. அன்பிலே உள்ள ஆனந்தம் வேறெதிலும் இல்லை என்று அனுபவத்தில் தெரிகிறது. ஆனால் நாம் யாரிடம் அன்பு வைத்தாலும் என்றோ ஒரு நாள், ஒன்று நாம் அவரை விட்டுப் பிரிகிறார். ஆனந்த ஹேதுவாக இருந்த அன்பு அத்தனையும் அழுகை மயமாகி விடுகிறது. நம்மை விட்டு பிரியாத ஒரே சாஸ்வதவஸ்து ஈஸ்வரன்தான். அவனிடம் அன்பு வைத்து விட்டால்? இந்த அனபு என்றும் சாஸ்வதமாக ஆனந்தம் தந்து கொண்டேயிருக்கும். இந்த அன்பு முற்றுகிற போது யாவுமே அவனாகத் தெரியும். ஒன்றிடம் அன்பு -காரணமாகவே இன்னொன்றிடம் த்வேஷம் என்றில்லாமல், எல்லாம் அவனானாதல் எல்லோவற்றிடமும் ஏற்ற தாழ்நில்லால்அன்பாக இருப்போம். அன்பற்ற வாழ்வு வாழ்ந்து மனுஷ்ய ஜன்மாவை விருதாவாக்கிக் கொள்ளாமல் இருக்க பக்தியே உதவுகிறது.

41. நம் மனதை கட்டுப்படுத்தினால் நாம் உயர்வடையலாம்

பெரிய தடை நம் மனேசதான். ஏதாவது காமம், கவலை, 'இது இப்படி யாகனும்' 'அப்பபடியாகனும் அப்படி ஆகுமா ஆகாதோ?' எப்படி ஆயிடுமோ?

Koviloor Digital Library

என்று பல தினுசான எண்ணங்களின் பாரத்தில் நெரிபடுவது என்று நம் மனசையே, நம்முடைய வாழ்க்கைப் பயணம் ஆனந்தப் பாதையில் போகமுடியாதபடி பெரிய தடையாகக் குறுக்கே போட்டுக் கொண்டிருக்கிறோம். விக்னேஸ்வரரை உபாசித்து உபாசித்து, அவருடைய பிரசாதத்தினால் அவர் மாதிரியே நாமும் குழந்தைகளாகி, ஒரு காமமும் இல்லை. கவலையும் இல்லை, போனதையும் வருவதையும் குறித்த மனோபாரம் இல்லவே இல்லை என்கிறாகி, அப்பப்போ ஒரு சந்தோஷமா? அதைக்குழந்தை மாதிரி சிரித்து அனுபவித்துக் கொண்டு, அதே மாதிரி சிரித்து அனுபவித்துக் கொண்டு, அதே மாதிரி அப்பப்போ ஒரு துக்கம் வந்தாலும், அந்த நிமிஷம் மட்டும் அழுதுவிட்டு, ஆனால் அப்புறம் நினைத்து நினைத்து அழாமல், இப்படி சிரிப்பு, அழுகை இரண்டும் இருந்தாலும் சிரித்து விளையாடுவது தான்-ஜாஸ்தியாக ஒரு குழந்தை இருப்பது போலவே இருந்து விட்டோமானால், நம்மைவிடப் பாக்கியசாலி இல்லை. குழந்தை ஸ்வாமி கனமான யானை ரூபத்திலிருந்தாலும் இந்த விசாரச் சுமை இல்லாமல் பரமலோசாக இருப்பவர், நம்மையும் அவர் அப்படிப் பண்ணப் பிரார்த்திப்போம்.

42. மனநெறி (mental discipline) பரம்பொருளும்

அளவறிந்து எதையும் செய்பவரால்தான் பரம சத்யத்தை அறிய முடியும் என்பதைத்தான் திருமூலர் 'கணக்கறிந்தார்கன்றிக் காண வொண்ணாதது கணக்கறிந்தார்க்கன்றி கை கூடாக் காட்சி' என்று சொல்லியிருக்கிறார். அவர் பண்ணின நூலுக்குத் 'திருமந்திரம்'என்று பெயர். அதனால் இந்த வார்த்தைகள் மந்திரம் மாதிரியானவையாகும். அதிகமாகப் பேசாமல் எல்லாவற்றிலும் கணக்காய் இருக்க வேண்டும். பேச்சு, எண்ணம், செய்கை, உணவு, உடை, செலவு எதிலானாலும் வாழ்க்கைக்கு எவ்வளவு அத்தியாவசியமோ, அதோடு கணக்காய் நிறுத்திக் கொள்ள வேண்டும். இப்போது பண்ணுகிற மாதிரி விரயம் செய்யக் கூடாது. கணக்காயிருப்பதுதான் இகம்பரம் இரண்டுக்கும் நன்மை செய்வது. மன நெறி இல்லாவிட்டால் பரம் எப்படி லபிக்கும்? அந்த மனநெறி (mental discipline)வருவதற்கு வாழ்க்கை அம்சங்கள் எல்லாவற்றிலும் கணக்காயிருந்து கட்டுப்படுத்திக் கொள்வதே உதவும்.

43. பக்தியும் பல்வகை அன்புகளும்

பக்தி என்பது ஈசனிடம் வைக்கும் அன்புதான். அன்புக்கே அது யாரைக் குறித்து வைக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து வேறு வேறு பேர்கள் உண்டு. சம வயசினிரிடம் வைக்கும் அன்புக்கும் சிநேகிதம், நட்பு என்று பெயர். பெரியவர்களிடம் வைக்கிற அன்பு மரியாதை. குழந்தையிடம் வைக்கும் அன்பு வாத்ஸல்யம். காதாநாயகன் நாயகி கொள்வது சிருங்காரம். நம்மாதிரி சாதாரணப்பட்டவர்கள், நம்மை விடத்தீனர்களிடமும், கஷ்டப்படு கின்றவர்களிடமும் வைக்கும் அன்புக்குப் பரிவு என்று பெயர். அதுவே நம்மை

Koviloor Digital Library

விட மஹா பெரியவர்கள் நம்மிடம் வைக்கும் போது அருள் க்ருபை என்றெல்லாம் பேர் எடுக்கிறது. வெறுமே பரிவாக ஓர் ஆறுதல் தருவதாக மட்டுமன்றி, தீன நிலையைக் கஷ்ட ஸ்திதியைப் போக்கடிக்கும் சக்தியே மஹான்களின் அருளுக்கு இருக்கிறது. அதன் உச்சிதான் ஈசுவரன் நம்மிடம் வைக்கும் பரிவான அன்பு-பரம கருணை, அனுக்ரஹம் என்று அதற்குப் பேர் சொல்கிறோம். அந்த ஈசுவரனிடம் நாம் வைக்கும் உயர்ந்த அன்புதான் பக்தி என்பது.

44. மனதற்றநிலை - ஈசுவரன் கருணையால்

கைகூடும் -விடாமுயற்ச்சிதேவை

வாய் மௌனத்தோடு தினமும் கொஞ்ச நேரமாவது, எதையும் நினைக்காமல் சிந்தனைத் தாரையை அடக்கி வைக்க வேண்டும், என்று சாஸ்திரம் சொல்கிறது. 'தூஷ்ணீம் கிஞ்சித் அசிந்த யேத்-சாதிப்பது கஷ்டந்தான். இதற்கென்றே உட்கார்ந்தாலும் எப்படி ஒன்றையும் நினைக்காமல் இருப்பது? ஒன்றையும் நினைக்காமலிருக்க வேண்டும்'என்று நினைவுதானே இப்போதும் வந்து கொண்டிருக்கிறது? என்று தோன்றும். மனசு எதையும் நினைக்காமலிருக்க வேண்டும், என்று பிரயாசைப்படுவதும் மனசின் ஒரு கார்யம்தான். சும்மா இருக்கும் திறம் அரிது என்று சொன்னது இதனால்தான். ஆனாலும் இப்படிப் பண்ண வேண்டும், என்று பூர்ண ஈடுபாட்டோடு, விடாமுயற்சியுடன் இதற்காக உட்காருவது என்று ஆரம்பித்தால், ஈசுவர க்ருபையில் அந்த லக்ஷ்யம் கொஞ்சம் கொஞ்சமாகக் கைகூட ஆரம்பிக்கும். நாம் பண்ணக்கூடியது யத்தனம்தான். பலன் ஈசுவரன்தான் தரவேண்டும். என்றைக்கோ ஒரு நாள் அவன் சித்தியை அனுக்கிரகிப்பான்.

45. எளியே வாழ்க்கையே ஞானம் தாரும்

நாம் பூலோகத்தில் ஜன்மம் எடுத்துவிட்டால், நமது பழைய வினைகளுக்குத் தக்கபடி இன்ப துன்பங்களை அனுபவித்தே தீர வேண்டும், என்பது கடவுளின் உறுதியான சட்டம். இதை யாரும் மீறவோ, தவிர்க்கவோ முடியாது. இதனின்றும் நாம் கடைத்தேற வேண்டுமானால், எளிய வாழ்க்கை நடத்தி ஞானம் பெற வேண்டும். ஞானமடைவதால் சில நற்குணங்கள் ஏற்பட்டு பொறுமையும், சாந்தியும் ஏற்படும். தனவந்தர்கள் சுகமாயிருக்கிறார்கள் என்று எண்ணக்கூடாது. அவர்களும் வெளியில் சொல்லிக்கொள்ள முடியாது பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். ஒவ்வொருவனும் தான்தான் அழகு, புத்திசாலி என்று நினைக்கிறான். வெளியில் பறைசாற்றாமல் மனத்துக்குள் எண்ணுகிறான். ஆனால் துன்பம் வந்தால் தனக்குதான் அதிகம் என்று ஓலமிடுகிறான். பிறருக்கும் அதே கஷ்டம்முண்டு, என்று நினைப்பதில்லைய இது தவறு. பிறர் கஷ்டங்கள்தான் பெரிது என்ற மனப்பான்மை வேண்டும். இதற்கு ஞானம் மிக அவசியம்.

Koviloor Digital Library

46. தியானமும் ஆத்மவிசுவாசமும்

ஒரு பாத்திரத்தை அலம்பும்போது, கடைசியில் சுத்த ஜலம் மட்டும் விட்டு, முதலிலே சுத்திக்குப் பிரயோஜனமான புளி, மண் முதலானவற்றின் கோது, தாள் முதலியவை இல்லாமல் அப்புறப்படுத்துகிறோம் என்பதோடு முதலிலே மண்ணையும் புளியையும் தேய்க்கிற போதுகூட அவற்றோடு சுத்த ஜலத்தைக் கொஞ்சம் சேர்த்துக் கெட்டியாகக் கரைத்துக் கொண்டுதானே தேய்க்கிறோம்? அந்த மாதிரி மனோ இந்திரியாதிகளால் கரமாக்களைச் செய்கிற காலத்தில்கூட ஆத்ம சிந்தனைத் தீர்த்தத்தை கொஞ்சம் இவற்றில் தெளித்துக் கொள்ளத்தான் வேண்டும்ய ஆரம்பத்திலிருந்தே அநேக கர்மாக்களுக்கிடையிலும், தியானத்திற்கென்று ஆத்ம விசாரத்துக்கென்று கொஞ்சம் காலம் ஒதுக்கத்தான் வேண்டும்.

47. கர்மமும் பக்தியும் ஞானத்திற்கு முன்னோடி

ஞானமடைவதென்பது எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் உண்டு. ஜாதி, வித்தியாசங்கள் சாஸ்திரங்களில் கிடையாது. ஆனால் அவனவனுக்குக் கடமைகள் சொல்லப்படுகின்றன. அவை செய்யும் தொழிலால் ஜாதியே தவிர, பிறப்பால் அல்ல. ஒவ்வொரு ஜாதிக்கும் பெருமை உண்டு. ஆனால் கடமையை மறந்தால் அந்தப் பெருமை போய்விடும். ஞானத்தின் முன்னோடிகளாகக் கர்மமும், பக்தியும் சொல்லப்படுகின்றன.

48. எளிய உணவு - மனஉறுதி - கடமை

கரமம் என்பது அவரவர் கடமையைச் செய்வது, அதாவது ஸ்வதர்மம். ஒவ்வொருவரும் ஓரளவுதானே சமையல் செய்து சாப்பிடக் கற்றுக்கொள்ள வேண்டும். உணவும் சுலபமாகத் தயார் செய்ய எளிதாக விருக்க வேண்டும். அதுவே உடம்புக்கு நல்லது. உணவுக்காக அதிக சிரமம் எடுக்கலாகாது. தொழிலைச் செய்து நிறையச் சம்பாதிக்கலாம். ஆனாலும் உணவு எளிமையாக இருத்தல் நல்லது. இதனால் மனம் உறுதியாக இருக்கும். பிறர்பால் கருணை ஏற்படும். ஆடம்பரத்தை ஒழித்தால், மனம் அன்பில் வசமாகி, அடுத்தபடியான பக்தியில் தாவுகிறது. ஜாதியைக்கொண்டு, மனதில் அகங்காரம் அடையாமல் தமக்குற்ற கடமையைச் செய்ய வேண்டும். எளிமைதான் பக்திக்கும், ஞானத்துக்கும் வித்து, முனிவன், சந்யாசி, அறிவாளி, முதியவர், சிறியோர், பணக்காரன் யாராயிருந்தாலும் ஜாதியின் வேற்றுமையைக் காணாமல் ஒத்த மனத்துடன் சுயத்தொழிலைச் செய்து பக்திவசமாக வேண்டும்.

Koviloor Digital Library

49. பக்தி பொதுவானது - உள்ளத்தில் உண்மை அடக்கம்

பக்தி பொதுவானது. கங்கையில் பல துறைகளில் இறங்கினாலும் எல்லோரும் கங்கா ஸ்நானம்தான் செய்கிறார்கள். பக்தி கங்கை போன்றது. பக்தியில் ஜாதி வித்தியாசங்கள் மறைந்துவிடும். நாம் பெரிய முனிவர்களைப் பார்த்தால் என்ன ஜாதி என்று கேட்டுக்கொண்டா வணங்குகிறோம்? நாம் நமது கடமைகளச் செய்யும் பொழுதும், அடக்கமாக அகம்பாவமில்லாமல் செய்ய வேண்டும். நம்மைப் பிறர் பெருமைப்படுத்தினாலும் அடக்கத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். பேச்சளவில் அல்ல. உள்ளத்திலேயே உண்மையான அடக்கம் வேண்டும்.

50. உண்மை சுகம் நமக்குள் ஞானத்தால் பார்க்கவும்

நாம் அனுபவிக்கும் கர்ம பலன்களெல்லாம் நமது காமம், குரோதத்தாலேயேதான் ஏற்பட்டவை. நாம் ஒன்றை அடைய விரும்பி காமவசபபடுகிறோம். அது கிடைக்காதபொழுது குரோதம் உண்டாகிறது. ஏன்? நாம் சுகத்தை வெளியே காண்கிறோம். சுகம் வேறு ஏதோவொன்றாகத் தெரிகிறது. எல்லாம் ஒரே பிரம்மம் என்று நினைத்தால் தெரிகிறது. எல்லாம் ஒரே பிரம்மம் என்று நினைத்தால் அந்த சுகத்தை நமக்குள்ளேயே நாம் காணலாம். இந்த பரமாத்ம ஸ்வரூபம் மறைந்து கிடக்கிறது. அதை நாம் ஞானத்தால் பார்க்க வேண்டும்.

51. போதுமன்ற மனமே பொன்செய்மருந்து

மனசு நல்லபடியாக இருப்பது என்றால் என்ன? எப்போது பார்த்தாலும் 'அது வேண்டும்; இது வேண்டும்;இப்போது இருக்கிறது சௌகர்யங்கள் போதாது; பொருள், பதவி பேர் வேண்டும்' என்று ஓயாமல் எதற்காவது மனசு ஆசைப்பட்டுக் கொண்டே இருக்கிறது. ஆதாவது, எப்போதும் அதிருப்தியிலேயே இருந்து கொண்டிருக்கிறது. வேண்டியது கிடைத்துவிட்டது என்றாலும் திருப்தியாக நிறைந்திருக்க அதற்கு தெரிகிறதோ? இல்லை. இன்னும் ஏதாவது தேவையை சிருஷ்டி பண்ணிக்கொண்டு அதற்காக அலையத்தான் செய்கிறது. இப்படியில்லாமல் மனசு திருப்தியாக நிறைந்து இருந்துவிட்டால், அப்போதுதான் சரியாக இருக்கிறது என்று அர்த்தம். ஆசை, அதனால் வருகிற அதிருப்தி, த்வேஷம், போட்டி. பொறாமை, துக்கம் இவை உள்ளவரை எத்தனை கோடீஸ்வரனானலும், மஹா பண்டிதனானலும், ஒருத்தனுக்கு சாந்தியுமில்லை; சௌக்கியமுமில்லை.'சாந்தமுலேக, லௌக்யமுலேது' என்று தியாகையர்வாளும்,'அசாந்தஸ்யகுத : ஸுகம் ' என்று கிருஷ்ண பரமாத்மாவும் சொன்ன மாதிரிதான். கிருஷ்ணர் சொன்னதை நினைத்துக் கொண்டேதான் தியாகையர்வாள் இப்படி பாடியிருக்கிறார் என்று தோன்றுகிறது. மன நிறைவினால் ஏற்படும் நிம்மதியில்லாமல் நிஜமான சௌக்யம் என்பது இல்லவே இல்லை என்று அந்த இரண்டு பேரும் சொல்கிறார்கள்.

Koviloor Digital Library

52. பண்பும் வினயமும்

இப்போதெல்லாம் பண்பு, நாகரிகம், கலாசாரம் என்கிற வார்த்தைகள் நிறைய அடிபடுகின்றன. ஆனால் இதுகளைச் சொல்லும்போது விநயத்தை முக்கியமான அம்சமாக நினைத்து நாம் பேசவில்லை. முன்காலத்தில் இப்படியில்லை. அப்போது கல்சர், கலாசாரம் என்றாலே அதற்கு முதல் லக்ஷணமாக விநயத்தைத்தான் நினைத்தார்கள். கல்சர், கலாசாரம் என்ற வார்த்தைகளுக்கும் கல்வி என்ற வார்த்தைக்கும் ரொம்பவும் சம்பந்தம் இருப்பதைக் 'கல்'என்பது இவை எல்லாவற்றுக்கும் பொதுவாக இருப்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

-630 307

53. நாம் கற்ற கலைகளும் விஞ்ஞானமும் இன்பத்தை தராது

ஏதேதோ தெரிந்து கொள்கிறோம். ஹிஸ்டரி, ஜாக்ரபி அடாமிக்சயின்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் என்று என்னென்னவோ தெரிந்து கொள்கிறோம். பலவிதமான உண்மைகளைத் தெரிந்து கொள்வதுதான் மனுஷ்யனாக பிறந்ததற்குப் பயன். இப்படி அநேக கலைகள், விஞ்ஞானங்கள் தெரிந்து கொள்கிறோம். நமக்கு இன்பத்தைத் தரும் உபகரணங்களை உண்டாக்கிக் கொள்வதற்காகவும் இப்படி அறிவினால் 'சர்ச்(தேடுவது) 'ரிசர்ச் (ஆராய்ச்சி செய்வது) எல்லாம் செய்கிறோம். இவற்றால் நம்மை மஹாபுத்திசாலிகளாக நினைத்துக் கொண்டிருக்கிற நமக்கு ரொம்பவும் அவமானமாக, நம் அத்தனை புத்திசாலித்தனத்தையும் அசடாக்குவதாக ஒன்று தெரிகிறது.

54. மெய்யறிவு பெற

அதாவது உண்மை என்று நினைத்து நாம் தேடிப்போன எல்லாவற்றையும் எந்த மனசினால் தேடினோமோ, எந்த மனசின் திருப்திக்காத் தேடினோமோ, எந்த மனசினால் உண்மைகள் என்று அவற்றைத் தெரிந்து கொண்டோமோ அந்த மனசே உண்மையில்லை, அது உண்மையான 'நாம்' இல்லை என்று தெரிகிறது. (மனசு என்பதை இங்கே புத்தியையும் உள்ளடக்கியதான அந்தஃகரணம் என்ற அர்த்தத்திலேயே சொல்லிக் கொண்டு போகிறேன்).

பொய்யைப் போஷிக்கவா இந்தப்பாடு? இப்படி ஏமாந்தல்லவா போயிருக்கிறோம்? இனிமேலாவது மெய்யறிவு பெற வேண்டாமா?

Koviloor Digital Library

55. பரம தியாக புத்தி

கொடுக்க வேண்டும். அதுதான் தியாகம். அதைத்தான் வேதம் எங்கே பார்த்தாலும் வற்புறுத்துகிறது. அந்தக்கர்மாவும் செய்து முடிக்கும்போது, 'நான்தான் கர்த்தா எந்பதால் இநன் பிரயோஜனம் எனக்கே வந்துவிடப் போகிறதே; அப்படி என் ஒருத்தனுக்கு மட்டும் பலன் கிடைத்து விடக்கூடாது' என்கிற பரம தியாக புத்தியில் 'நமம' - 'எனக்கில்லை, எனக்கில்லை' என்று அதன் பலனை லோக க்ஷேமார்த்தம் பண்ணச் சொல்கிறது நம் மதம்.

56. உபவாசம் இருப்பது ஏன்?

கரும்பை கசக்கிக் கிலேசப் படுத்துவதால்தான் கரும்பஞ்சாற்றை எடுத்துப் பானம் பண்ணுகிற இன்பம் கிடைப்பதுபோல், உடம்பைக் கிலேசப்படுத்துவதால்தான் உள்ளத்துக்கு சுகரசம் கிடைக்கிறது.

வியாபாரி முதலில் கையிலிருப்பதைச் செலவழித்துத்தான் பண்டங்கள் வாங்குகிறான். அப்புறம் அதை விற்று அதிகப் பொருள் சம்பாதிக்கிறான். அப்படியே உடம்பை முதலில் செலவழித்து, அப்புறம் அந்தச் செலவுக்கு மேல் பெரிய வரவு ஆத்மாவுக்கு சம்பாதித்துக் கொள்வதற்கே உபவாசமிருப்பது.

57. உண்மையான பக்தி

பக்தி நிஜமானதாக இருந்தால் பக்தி பண்ணுதிறவன் அதற்குப் பிரதியே எதிர்ப்பார்க்க மாட்டான். பிரதி பிரயோஜனம் எதிர்பார்த்துவிட்டால், அது வியாபாரமே ஒழிய பக்தி இல்லை என்று பாகவதாதி நூல்களில் சொல்லியிருக்கிறது. இப்படி பக்தன் (பிரதி வேண்டாமல்) இருந்தாலும் இவனிடமிருந்து நிஜமான பக்தியை பெற்றுக் கொண்ட பகவானுக்கு மனசு கேட்குமா? அதனால் அவன் கிருபை பண்ணத்தான் பண்ணுவான். ஞானத்தை அனுகிரகிக்கத்தான் செய்வான். பக்தனை சம்சாரத்திலிருந்து விடுவித்து மோக்ஷத்தில் சேர்க்கத்தான் செய்வாந்.

58. ஏகாதசி புராணம் ஜபம் பஜனை நடத்துதல்

ஏகாதசி புராண படனம் ரொம்ப விசேஷம். சாப்பாடு இல்லாத வாய்க்கு அதைவிட ரசம் சொட்டுகிற அவனுடைய நாமாமிருத்தை, லீலாமிருதத்தை, ஜபமாக, பஜனையாக, ஸ்தோத்திரமாக, காதுக்கு அம்ருத போஜனமாகக் கீர்த்தனையும் ஹரிகதையும் கிடைக்கப் பண்ணனும்.

Koviloor Digital Library

59. குருதான் நிலைத்து நிற்கும் சொத்து (சாஸ்வதமான சொத்து)

அப்பா வைத்துவிட்டுப் போகும் சொத்து சாஸ்வதமில்லை. நாமே தேடிக்கொள்கிற சொத்துக்களுக்கும் அதேகதிதான். சாஸ்வதமான சொத்து, இழந்து போகாத, ரிப்போர் பண்ண வேண்டாத சொத்து, திருட்டுப் போய்விடுமோ? என்று பயப்படவும் வேண்டாத சொத்து, ஏமாற்று வழிகளில் போய் நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டாத சொத்து, அப்பா கொடுக்க முடியாது; நாமாகவும் தேடிக் கொள்ள முடியாது.

குரு என்கிற ஒருத்தர் சாஸ்வதமான அந்த சொத்தைத் தருகிறவர். ஞானம் என்ற சொத்தைக் குரு அனுக்ரகிக்கிறார். மற்ற சொத்து எதுவானலும் அதனால் கிடைக்கும் எல்லா சுகங்களும் தற்காலிகம்தான். நித்யானந்தம் என்றே சொல்லப்படுவதான சாஸ்வத சுகத்தைத் தருவது குரு அனுக்கிரக்கிற ஞானமொன்றுதான்.

60. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும்

ஒரு காக்கை இருக்கிறது. எங்கேயோ ஒரு பழத்தைச் சாப்பிட்டுவிட்டு நம் தோட்டத்திலே வந்து எச்சமிடுகிறது. அந்தப் பழத்தின் கொட்டை இங்கே நம் வீட்டுத்தோட்டத்தில் விழுந்து மரமாகிறது. அந்த காக்கை நமக்கு ஓர் உபகாரம் பண்ணிவிட்டது. நாய் காவல் காக்கிறது. குதிரையை வண்டியில் கட்டி சவாரி பண்ணுகிறோம். கோமாதா நமக்குப் பௌதிகமாகவும், ஆத்மார்த்தமாகவும் பண்ணுகிற உபகாரம் கொஞ்சநஞ்சமில்லை. இப்படி எல்லாரிடமும் உபகாரம் பண்ணாமல் இருந்தால் பாபம் அல்லவா? 'நன்றி மறப்பது நன்றன்று', 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு'என்றெல்லாம் மகா பெரியவர் வள்ளுவர், இன்னும் மனு, வியாசர் எல்லாரும் சொல்கிறார்களே!

61. பக்தியும், கிருபையும், பலனும்

பக்தி செலுத்துவதால் முக்தி கிடைத்துவிடுமென்று சொன்னால், நாம் செலுத்தும் அந்த பக்தியே நேராக முக்தியைக் கொடுத்து விடுகிறது என்று அர்த்தமில்லை. நாம் செய்கிற எதுவுமே தானாக எந்தப் பலனையும் தருவதில்லை. பலன்களைத் தருகிற தாதாவாக ஈஸ்வரனே இருக்கிறான். அவன்தான் பாப புண்ணியம் பார்த்து, எல்லோருக்கும் எல்லாப் பலனையும் கொடுக்கிறான். அவ்விதத்தில் நாம் பண்ணுகிற பக்திப் பலனாக, அவன் பரமக்கிருபை செய்து கொடுக்கிறான். ஞானம் தந்து, அந்த ஞானத்துக்குப் பலனாக மோக்ஷானுபூதியைக் கொடுக்கிறான். ஆக பலன் தருவது நாம் பண்ணும் பக்தியே அல்ல. அதற்குப் பிரதியாக ஈஸ்வரன் செய்யும் கிருபைதான் பலனைத் தருவது.

Koviloor Digital Library

62. உபவாசம்

சாப்பிடுகிற நாட்களிலும் பகவத் தியானம் பண்ணுங்கள். உபவாச நாளில் சாப்பிடாமலிருந்தும் தியானம் பண்ணிப் பாருங்கள். தனக்கே வித்தியாசம் தெரியும். அந்த லாபத்திற்காக இந்த நஷ்டம் படலாம் என்று தெரிந்து கொள்வீர்கள். நான் நிறையச் சொல்வதைவிட, பிரத்யக்ஷமாகப் பண்ணிப் பார்த்துவிட்டாலே உபவாசத்தின் அவசியமும் பெருமையும் விளங்கும்.

வயிற்றை வற்றப்போடுகிற நாட்களில் மனசுக்கு தியானம்ருத போஜனத்தை கொடுத்துக் கொண்டால், எது பெரிய இன்பம் என்று தெரியும்.

63. வரதக்ஷிணை, வைரத்தோடு, சீர் வேண்டாம்

ஸௌந்தர்ய லஹரி சொல்கிறோம். அபிராமி அந்தாதி சொல்கிறோம் என்று பல பெண்கள் என்னிடம் வந்து ஆசீர்வாதம் கேட்கிறார்கள். நல்ல காரியம்தான் ஆசீர்வாதம் பண்ணுகிறேன். ஆனால் இதையெல்லாம் விட அதிகமாக அம்பாளுடைய ப்ரீதியைச் சாம்பாதித்துக் கொள்ள வேண்டுமானால், இவர்கள் வரதக்ஷிணை, வைரத்தோடு, சீர்செனத்தி என்ற கண்டிஷன் இல்லாமல், நான் சொன்ன மாதிரி கல்யாணங்களுக்கு மனப்பூர்வமாகச் சம்மதித்தால்தான் முடியும். தங்கள் மாதிரியான பெண்கள் வயது வந்ததும், கல்யைணமாகாமல் நிற்பது, அதனால் மனவிகாரப்படுவது, மானபங்கப்படுவது, அப்புறம் மான உணர்ச்சியும் மரத்துப் போய்விடுவது என்றிப்படி ஆகியிருக்கிற நிலைமையை மாற்றுவதற்கு இரங்கினால், இவர்களிடம் அம்பாளுக்கும் மனசு தானாக இரங்கும்.

64. வரதக்ஷிணை தந்தாலும், வேண்டாம்

'நாங்கள் கேட்காமல், பெண்வீட்டுக்காரர்களாகவே இத்தனை கொடுக்கிறோம் என்று சுயேச்சையாக தந்ததால் வாங்கிக் கொண்டோம்' என்று சொல்வது கூடத்தப்பு. ஏனென்றால், ஒருத்தர் பண்ணுவதிலிருந்து இன்னொருத்தர், என்று இது செயின் மாதிரி போய்க் கொண்டிருக்கிற வழக்கம். கட்டாயப்படுத்தாமலே ஒருத்தர் வரதக்ஷிணை கொடுத்தாலும், இதனால் அவர் தம் பிள்ளைக்கும் கல்யாணம் பண்ணும் பொழுது, வரதக்ஷிணை எதிர்பார்க்கத்தான் செய்வார். அதனால் அவர்களாகவே கொடுத்தாலும் கூட. 'வேண்டாம்' என்று சொல்கிற உயர்ந்த மனோபாவம் வேண்டும்.

65. உதாரண புருஷர்கள்

ஜன சமுதாயத்தில் அடங்கிய எல்லோரும் நிறைந்த நிறைவாக ஆகிப் பூர்ணத்வம் அடையாவிட்டால் பரவாயில்லை. மரத்துப் பழம் மாதிரி,

Koviloor Digital Library

1993
R65

ஜனத்தொகையில் எவரோ ஒருத்தர், ஆயிரத்தில் லக்ஷத்தில் ஒருத்தர், பூர்ணமாகிவிட்டால் கூடப்போதும். அத்தானம் பெரிய சமுத்திரத்தைக் கடைந்து, ஒரு சின்னக் கலசம் அம்ருதம் எடுத்தது மாதிரி, இவ்வளவு ஜீவ கோடிகளுள்ள சம்சாரத்தைக் கடைவதிலிருந்து, அம்ருத தத்துவமாக ஆன உதாரண புருஷர்கள் ஸ்வல்பம் உண்டாலும் போதும்.

66. பகவான் - மத்து பக்தி - கயிறு

- ஆதி சங்கர

பவக்கடலைக் கடைந்து, அதன் சாரமாக ஸ்வல்ப அளவு அம்ருதத்தை எடுக்க உதவுகிறது மத்தாகத்தான் / ஆசார்யாள் பகவானை நினைத்து 'பவஜலதி மதன மந்த்ர' என்கிறார். மத்தைப் போட்டுக் கடைந்த உடனே வெண்ணெய் வந்து விடுமா? எத்தனையோ நாழி சிலுப்பினால்தான் வரும். அதுவரை அவசரப்படக்கூடாது; ஆத்துரப்படக்கூடாது; நம்பிக்கை இழக்கக் கூடாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம், அந்த மத்து கயிற்றிலிருந்து நழுவிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். என்ன கயிறு? பக்தி என்கிற கயிறுதான். நாம் பக்திக் கயிற்றால் பகவான் என்ற மதத்தைச் சுற்றி, பிடிப்பை நழுவ விடாமலிருந்தால், அவர் இந்த சம்சார சாகரத்தைக் கடைந்து, முதலில் விஷயங்களைத் திரட்டி அப்புறப்படுத்திவிட்டுப் பிறகு நமக்கு அம்ருதம் எடுத்துக் கொடுத்து விடுவார். ஆதாவது அம்ருத நிலையான மோக்ஷத்தைக் கொடுத்து விடுவார்.

67. தானத்தால் அகங்காரம் கூடாது

வஸ்துக்களைக் கொடுத்து விட்டு, 'நான் கொடுத்தேன்' என்ற எண்ணத்தை மட்டும் வைத்துக் கொண்டே இருந்தால், இந்த அகங்காரமானது, தியாகத்தாலும், தானத்தாலும் கிடைக்கிற ஆத்மா விருத்தியை, அப்படியே ஏப்பம் விட்டு விடும். தியாகம் பண்ண வேண்டும்; அதை விட முக்கியமாக, தியாகம் பண்ணினேன் என்ற எண்ணத்தையும் தியாகம் பண்ணி விட வேண்டும்.

மஹா பலி நிறையக் கொடுத்தான். வாரி வாரி கொடுத்தான். ஆனால் தான் கொடுக்கிறோம் என்ற அகங்காரத்தை, அவன் பகவானுக்குப் பலி கொடுக்கவில்லை. இதனால்தான் பகவானுக்குப் பலி கொடுக்கவில்லை. இதனால்தான் பகவானே அவனிடம் இந்த அகங்காரத்தை யாசகமாகப் பெற்று, அகங்கார நாசத்துக்கு அடையாளமாகத் தலையிலே கால் வைத்தான்.

68. பாபங்கள் கரைய புண்ணியங்கள் செய்க

எவ்வளவோ பாபம் பண்ணித்தான் இந்த ஜன்மாவை அடைந்து, அலையாக அலைந்து கொண்டு, சாஸ்வத சௌக்யத்தைத் தெரிந்து

Koviloor Digital Library

கொள்ளாமல் உழன்று கொண்டிருக்கிறோம். இப்போதாவது புண்ணியங்களைப் பண்ணிப் பாபத்தைக் கரைக்க வேண்டாமா? புண்யகார்யங்களை, அநேக தர்மங்களைப் பண்ணியாக வேண்டும். அவற்றை இந்த உடம்பு இருக்கும் பொழுதுதான் செய்ய முடியும்.

69. பொதுத் தொண்டு

எந்த ஆபீஸானாலும் ஃபாக்டரியானலும் வாரத்தில் ஒருநாள் லீவு இருக்கிறதல்லவா? பள்ளிக்கூடம், கோர்ட் முதலியவற்றில் வாரத்தில் இரண்டு நாட்கள் லீவுகூட இருக்கிறது. இந்த லீவு நாட்களெல்லாம் பொதுத் தொண்டுக்கென்றே பகவான் கொடுத்திருப்பது என்று நினைத்து, கூட்டாகச் சேர்ந்து சேவை செய்ய வேண்டும். மனசு மட்டும் இருந்துவிட்டால், செய்வதற்கு எத்தனையோ பணிகள் இருக்கின்றன.

சிரத்தையாக உழைக்கக்கூடியவர்கள், பண விஷயத்தில் நாணயமாக இருக்ககூடியவர்கள் 'இவர்கள் சுத்தமானவர்கள்' என்று சமூகத்திற்கு நம்பகமாக இருக்கிறவர்கள் ஒரு பத்துப் பேர் அங்கங்கே சேர்ந்துவிட்டால் போதும். ஊர் உலகத்தில் ஒரு குறைவுமில்லாமல் பொதுநலக் கார்யங்கள் ஜாம் ஜாமென்று நடந்துவிடும்.

70. ஆடம்பரச் செலவு வேண்டாம்

ஒரு பணக்காரனுக்கும், தன்னைவிடப் பணம் படைத்த ஒருத்தனைப் போல் தானும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆடம்பரத்துக்கும், டாம்பீகத்துக்கும் ஊதாரித்தனமாகச் செலவழித்துக் கடன் படுகிறான். உலகத்தில் பணக்காரனுக்குத்தான் ஜாஸ்திக் கடன் இருக்கிறது. இது விசித்திரமாக, வேடிக்கையாகத் தோன்றினாலும், வாஸ்தவநிலை இதுதான். ஏழைகள் எத்தனையோ பேர் கடன் இல்லாமல் இருக்கிறார்கள். பணக்காரர்களில் கடன் இல்லாமல் இருப்பவர்கள் துர்லபமாகத்தான் இருப்பார்கள். போலி அந்தஸ்தை விட்டால் அவனுக்கு இத்தனை செலவு, கடன் இருக்கவே இருக்காது. லோகத்தில் எத்தனையோ பேர் கஷ்டப்படும்போது, நாம் இத்தனை டாம்பீகங்கள் செய்வது நியாயமா என்று அவரவரும் கேட்டுக்கொண்டு, செலவைத் தர்ம நியாயமாகக் கட்டுப்படுத்திக் கொண்டால், எத்தனையோ தான, தர்மம், பரோபகாரம் செய்யலாம்.

71. வீண் செலவுக்குப் பதில், தான தர்மம் செய்க

லோகத்தில் ஒருத்தருக்கும் சாப்பாடு இல்லைச துணி இல்லை என்ற குறை யில்லாமல் செய்துவிடலாம். இப்போது செய்கிற டாம்பீகத்தால் ஒருநாளும் பெறமுடியாத ஈச்வரானுக்ரஹத்தையும் இந்த பரோபகாரத்தினால் பெற்றுவிட முடியு ம். ஏழைதான் என்றில்லை பணக்காரனும்கூட 'இந்த

Koviloor Digital Library

வஸ்து நமக்குத் தேவைதனா? இது இல்லாவிட்டால் பிராணன் போய்விடுமா? இது இல்லாவிட்டால் ஜீவிக்க முடியாதா? நம் அப்பாவும், தாத்தாவும் இது இல்லாமலே சௌக்கியமாக இல்லையா?' என்று அவ்வப்போது கேட்டுக்கொண்டு, செலவழிப்பதில் கணக்காயிருக்கணும். இப்படிச் செய்தால் கொடுப்பதில் கணக்கில்லாமல்லிருக்க முடியும். எடுக்க எடுக்க ஊற்றில் ஜலம் வருகிற மாதிரி, கொடுக்க கொடுக்க மஹாலக்ஷ்மியின் அனுக்ரஹம் மேலும் வளரும்.

72. நம்மாலான உபகாரம், தயை செய்க

'பகவான் நம்மைக் கண் திறந்து பார்க்க வேண்டும்' என்று எல்லோரும் குறைப்பட்டுக் கொள்கிறோம். கருணைக் கடலான ஈஸ்வரன், கண்ணைத் திறந்து பார்த்து கொண்டேதான் இருக்கிறான். ஏன் அவன் நாம் இஷ்டப்படுகிற மாதிரி நமக்கு ஸௌபாக்கியங்களைத் தரவில்லை என்றால், நாம் கண்ணைத் திறந்து லோகத்தின் கஷ்டங்களைப் பார்த்து, அது நிவர்த்தியாவதற்கு நம்மாலான உபகாரத்தைப் பண்ணாமலிருப்பதுதான். நம் மனசு மற்றவர்களிடம் தயையால் நிரம்பினால், உடனே கருணையே உருவான ஈஸ்வரனும் நமக்குத் தயை புரிவான். ஆதனால், கண்ணைத் திறந்து பார்க்க வேண்டியது நாம்தான்; பகவானல்ல.

73. பிரார்த்தனா: மனதைக் கட்டுப்படுத்த

பகாவானிடம் புதிதாக நாம் ஒன்றும் கேட்டுப் பெற வேண்டியதில்லை. நம்மிடம் இல்லாமல் அவனிடம் உள்ள ஏதோ ஒன்றைக் கேட்கவேண்டியதில்லை. நம் இடையே இருக்கும்படியான நம் உண்மை ஸ்வரூபத்தை மனத்தால் மறைத்துக் கொண்டு. ஓயாமல் துக்கப்படுகிறோம். 'என் உண்மை நிலையை உணர அருள்வாயாக; என்னை நான் அறிய முடியாதபடி இந்த மனசு ஆட்டிப்படைக்கிறது. இதை அன்பினாலே கட்டி, கட்டுப்படுத்தி என்னிடம் கொடுத்தால்போதும். என் ஸ்வரூபத்தையே நான் காண முடியாமல் கெடுக்கும் இந்த கெட்ட மனப்போக்கை நீ எடுத்துப் போ, என் ஸ்வரூபத்தையே எனக்களித்து, அதை காக்க வேண்டிய காவலன் நீ என்று பிரார்த்திப்போம்.

74. இஷ்டப்படி நடந்தால் கஷ்டம்

இஷ்டத்தைத் தருவது ஒன்றாகவும், நல்லதைச் செய்வது வேறொன்றாகவும் இருக்கின்றன. 'ப்ரேயஸ்' 'ஸ்ரேயஸ்' என்று உபநிஷத்தில் சொல்லியிருக்கிறது. இஷ்டமாக இருப்பது எதுவோ, அதுவே நமக்குப் பிரியமாக இருக்கிறது. அதுதான் ப்ரேயஸ். இந்த வார்த்தை நடைமுறையில் இல்லை. ஆசீர்வாதம் செய்யும்போது' எல்லா ஸ்ரேயஸும் உண்டாகட்டும்'

Koviloor Digital Library

என்கிறோம். எது எது உண்மையில் ஓர் உயிருக்கு நல்லதைத் தருவதோ, அதுவே ஸ்ரேயஸ்.

இஷ்டம் என்று ஒன்றில் போய் விழுகிறோம். கண்டதைத் தின்கிறோம். அப்புறம் அதனால் கஷ்டம் தெரிகிறது. அந்த நிலையில், இஷ்டப்படாத ஒன்றுதான் - கசப்பு மருந்து, பட்டினி போன்ற ஒன்றுதான் கஷ்டத்தைப் போக்கி, நல்லதைச் செய்ய முடியும் என்று தெரிகிறது.

75. தர்ம சாஸ்திரி ரூல்களைப் பின்பற்றவும்

இஷ்டப்படி மனசை ஓடவிட்டு, அதன் விளைவாகக் கண்டபடி காரியம் செய்து, கஷ்டத்தைத் தேடிக்கொள்ளாமல் இருக்க, தர்ம சாஸ்திரக் கட்டைப் போட்டுக் கொள்ள வேண்டும். அதிலே விதித்திருக்கிற ரூல்கள் மனசுக்கு இஷ்டமானதாக இருக்காது. போட்டு நெரிக்கிற மாதிரிதான் இருக்கும். இதில் உற்சாகம் ஊட்டுவதான ஓர் அம்சம் இருக்கிறது.

கசப்பு மருந்தை வேண்டா வெறுப்பாகத்தான் சாப்பிடுவோம். சாஸ்திர ரூல்கள் இப்படி இல்லை. கொஞ்சகாலம் அவற்றைப் பின்பற்றிச் செய்தோமானால், அப்புறம் அவற்றிலேயே ஒரு பிடிப்பு, ஒரு பிடித்தம் ஏற்பட்டு விடும். 'விதியே' என்று அவற்றை அனுஷ்டிக்காமல், சரியான ஒன்றைச் செய்கிறோம் என்ற சந்தோஷம் ஏற்பட்டுப் பிரியத்தோடு அவற்றைஅனுசரிக்க ஆரம்பிப்போம்.

76. பதட்டமில்லாமல் நிம்மதியுடன் அனாயாசமாக செய்க : Virtue

ஆயாசத்துக்கு எதிர்ப்பதம் அனாயாசம். லைட்டாக இருப்பது என்கிறார்களே, அதுதான் அனாயாசம். ஆயாசம் இல்லாமல், ஆதாவது எதையுமே ஒரு சுமையாக எடுத்துக்கொண்டு கஷ்டப்படமால், லைட்டாக லோசாக இருப்பது அனாயாசம். எப்போது பார்த்தாலும் 'உர்' ரென்று இருந்துகொண்டு, வாழ்க்கையில் தனக்கு எல்லாம் கஷ்டம் என்று புலம்பிக்கொண்டு, நொந்து கொண்டு இல்லாமல், எதிலும் கடுமையாக செய்யாமல், நிம்மதியோடு லேசாக செய்ய வேண்டும். இப்படிச் செய்வதாலேயே ஆயாசப்பட்டுக் கொண்டு செய்வதைவிடப் பலமடங்கு வேலை செய்துவிடலாம். பதட்டமில்லாமல் பண்ணுவது அனாயாசம், படபடவென்று செய்தால், நம்மையும் நெரித்துக்கொண்டு, மற்றவர்களையும் நெரிப்பதுதான் மிஞ்சுமே தவிர, சரியாக ஆகாது. அனாயாசம் பெரிய Virtue (குணசீலம்)

77. எல்லாம் அவன் செயல், மனது சஞ்சலப்படத்தேவையில்லை

அனேக கர்மானுஷ்டானங்களில் உடம்பால் சிரமப்படத்தான் வேண்டியிருக்கும். சிரார்த்தம் செய்வதென்றால் இரண்டு மூன்று மணிவரை

Koviloor Digital Library

பட்டினி கிடக்கத்தான் வேண்டும். ஒரு யாகம் என்றால், அதில் இருக்கிற சரீர சிரமம் கொஞ்சநஞ்சமில்லை. ஆகையால் இங்கே சிரமப்படக்கூடாது என்பது, மனசினால் சிரமப்படாமலிருப்பதைத்தான் குறிக்கும். எந்தக் காரியமானாலும் விக்கினங்கள் வரத்தான் செய்யும். இதைப்பார்த்து மனசை Strain பண்ணிக்கொள்ளக்கூடாது. எல்லாம் பகவான் திட்டப்படி நடக்கிறது என்று, மனசிலே பாரமில்லாமல் இருக்க வேண்டும். சங்கீத வித்வான் அனாயாசமாக தார ஸ்தாயி பிடித்தார் என்றால் என்ன அர்த்தம்? சிரமமான வாழ்க்கையை அப்படிப் பண்ணிக்கொள்ள வேண்டும்.

78. பரமார்த்த சத்தியத்தை அடைய

(நம்பிக்கையும் விடாமுயற்சியும் தேவை)

ஆழ்வார்கள் விஷ்ணு பரமாகப்பாடி வைத்திருக்கிறார்கள். நால்வர் சிவபரமாகப்பாடினார்கள். வேதத்தில் சகல தெய்வங்களையும் ஒரேமாதிரி ஸ்தோத்திரம் செய்திருக்கிறது. உபநிஷத்து என்று போனால், அங்கே தெய்வங்களைப் பற்றி அதிகம் பேச்சில்லாமல், எல்லாம் ஆத்ம தத்துவமாகச் சொல்லியிருக்கிறது. இங்கே திருவள்ளுவரை எடுத்துக்கொண்டால், அவர் தெய்வம் இவைகளைப் பற்றி வைதிக சம்பிரதாயப்படியே சொல்லியிருந்தாலும், அதைவிட அதிகமாகத் தர்மங்கள், நன்னெறிகள் (Morals, ethics) இவற்றையே சொல்கிறார். இன்னொரு பக்கம் திருமூலரைப் பார்த்தால், அங்கே ஸ்வாமி பக்தி என்பதைவிடப் பிராணாயாமம், தியானம், தாரணை, சமாதி, இத்தியாதி யோக சமாசாரங்கள்தான் நிறைய வருகின்றன.

இவைகளில் நாம் எதை எடுத்துக்கொண்டாலும் தப்பில்லை. நாம் எடுத்துக் கொண்டதை நடுவிலே விடாமல், அதையே நம்பிக்கையோடு பிடித்துக்கொண்டு போய்க் கொண்டேயிருந்தால், முடிவில் எது பரமார்த்த சத்தியமோ அதையே அடைந்துவிடுவோம்.

79. பழைய கார்ம பாக்கியைப் போக்க

நாம் எல்லோரும் ஸ்வயஞ்ஜ்யோதியான ஆத்மாதான் என்றாலும், அது நமக்கே தெரியாதபடி. கர்மா மேகமாக மறைக்கிறது. கர்மா முடிய ஜீவனை அதிலிருந்து வெளியிலே கொண்டுவர வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. நம்மை லோகத்தில் வெறுமனே தனியாக விட்டு வைத்திருக்கவில்லை. பெண்டாட்டி, பிள்ளைகுட்டி என்று சேர்த்து வைத்திருக்கிறது. இதுவும் கர்மாவால் ஏற்பட்டதுதான். கர்ம வாசனை ஒரு பக்கம் நம் மனசுக்குள் அழுக்குகளை ஏற்றி ஆத்மாவை உணர முடியாமல் பண்ணுகிறதென்றால், கர்ம பந்தம் பல உறவுகளாக வந்து ஒரு வீட்டிலே கட்டிப்போட்டுக் கடமைகளைப் பண்ண வைக்கிறது. உடம்பு என்ற வீட்டுக்குள் இருக்கும் ஜீவன், அப்புறம் அந்த ஜீவனுக்கு பந்துக்கள் என்பவர்களால் ஏற்பட்டிருக்கும் வீடு - இவற்றுக்கு ஒருத்தன் பண்ண வேண்டிய கடமைகளைப்

Koviloor Digital Library

பண்ணினாலன்றி, கர்மாவைத் தீர்க்க முடியாது. இத்தனை பழைய கர்மா பாக்கியை வைத்துக்கொண்டு, இப்போதே ஆத்மா தெரியணும். ஈஸ்வரன் தெரியணும் என்றால், தெரியாது. சத்கர்மாவால் பாப கர்மாவைப் போக்கிக்கொண்டபின்தான், மேகம் விலகி சூர்யப் பிராகசம் தெரியும். இந்த சத்கர்மா பலவிதமான கடமைகள் ரூபத்தில் இருக்கிறது. ஆத்ம ஞானம் அல்லது ஈஸ்வர பக்தி என்று ஒரே ஆவேசமாகப் போகிற அபூர்வமான சிலபேர்களுக்குத்தான் ஒரே Flash-ல் கர்மா அறுந்துவிழுமே தவிர, மெஜாரிடி ஜனங்களுக்கு ட்யூட்டிகளை சுத்தமாகப் பண்ணிப் பண்ணி, ரொம்பவும் gradual ஆகத்தான் கர்மாவைப் போக்கிக் கொள்ள முடியும்.

80. மன வாக்கு காயம் மூன்றாலும் ஈஸ்வரனை நாடவேண்டும்

மனோ, வாக், காயம் (உடம்பு) என்கிறபடி-மனசால் பகவத் ஸ்மரணம், வாக்கினால் மந்திரம், காயத்தால் காரியம் மூன்றையும் சேர்த்துதான் ஆசாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மந்திரம் அல்லது பகவத் நாமம் இல்லாமல் காரியத்தைப் பண்ணுவதில் பிரயோஜனம் இல்லை.

மனுஷ்யன் செய்கிற காரியத்தில் அனேகம் எல்லா ஜீவஜந்துக்களுந்தான் செய்கின்றன. ஒரு கிருமியிலிருந்து ஆரம்பித்து, எந்த ஜீவ ராசியும் சாப்பிடத்தான் செய்கிறது. அப்படியே மனுஷ்யனும் செய்தால், மனுஷ்ய ஜன்மா எடுத்து என்ன பிரயோஜனம்? அதனால்தான் இவன் பிராணாஹுதி சொல்லி குளி, சாப்பிடு, காரியங்களைச் செய்து, கோவிந்த நாமாவைசெ சொன்னபடி சாப்பிட வேண்டுமன்று, சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது.

மீன் கூடத்தான் சதாவும் ஜலத்திலேயே முழ்கியிருக்கிறது. அதனால் அது ஸ்நானம் பண்ணி மடியாயிருக்கிறதாகி விடுமா? மந்திரவத்தாகக் குளித்தால்தான் அது ஸ்நானமாகும். அல்லது கோவிந்தா, கோவிந்தா என்றோ, இஷ்ட தெய்வத்தின் நாமத்தைச் சொல்லிக் கொண்டோ ஸ்நானம் செய்ய வேண்டும்.

இப்படி எல்லாமே, காரியமாக மட்டுமில்லாமல், மனசும் வாக்கும் ஈஸ்வரனிடம் செலுத்தப்பட்டு செய்யப்படுவதுதான் ஆசாரம்.

81. குரு பக்தி - உலகமுழுவதும் அன்பு செலுத்தலே ஆனந்தநிலை அடையவழி

மகா பெரியவர்களிடத்தில் அன்பு இருப்பது விசேஷம் இல்லை. மகாபாவியிடமும் அதே அன்பு இருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அவனிடமே அதிக அன்பு வைக்க வேண்டும். 'நாம் தப்பு செய்வது போலவே இவனும் செய்கிறான். இவன் மனம் இவனை இப்படித் தூண்டுகிறது. அந்த மனத்தை நல்லதாக்க முயற்சி பண்ணுவோம்' .என்று நினைக்க வேண்டும். ஈஸ்வர கிருபையால் அனுக்கிரக சக்தி

Koviloor Digital Library

பெற்றிருப்பவர்கள், அதைக் கொண்டு பாபியிடம் உள்ள பாபங்களை நிவர்த்தி பண்ணுவதையே முக்கியமாகக் கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் ஒரே ஒரு மனிதரிடம் காரணமில்லாத தூய அன்பை வைக்கப் பழகிவிட்டால், பின்னால் அதுவே நம்மை அன்பு மயமாக்கி, அந்த அன்பை எல்லோரிடமும் பரப்ப உதவி புரியும். குருவிடம் இவ்விதம் பயன் எதிர்பாராமல் பூரண அன்பு வைக்க பழக வேண்டும் என்பது பெரியோர்கள் ஏற்படுத்தியுள்ள விதி. குருவிடம் காரணம் பார்க்காமல், வியாஜம் இல்லாமல் அன்பு தருகிற ஆனந்தத்தில் பழகிப் பழகி லோகம் முழுவதும் குருவாக நினைத்து, சமஸ்தப் பிராணிகளிடமும் காரணமில்லாத சமமான அன்பு செலுத்த வேண்டும். லோகம் முழுவதும் அன்பை நிரப்பினால் அதுவே ஆனந்த நிலை, அதுவே பிரபூர்ண நிலை, அதுவே பரம சாந்தி.

82. நமக்கு நாமே கட்டுபாடுகளை செய்துகொண்டு நல்வாழ்வு வாழ்ந்தால், ஆத்ம சுதந்திரம்

கட்டாகத் தெரிகிற சாஸ்திரங்கள் வாஸ்தவத்தில் கட்டுமில்லை. நிஜ ஸ்வதந்திரமான மோக்ஷத்துக்கு வழி பண்ணுவது அதுதான். 'தொம்பங்கூத்தாடி' என்பார்கள். 'ஸ்தம்பக்கூத்தாடி' என்பதுதான் அப்படித் திரிந்து வந்திருக்கிறது. ஸ்தம்பம் என்பது தூண். 'மாஜிக்ஷோ' வில் தொம்பங்கூத்தாடி வருவான். அனேகத் தூண்களில் ஒன்றில் அவனை ஏகப்பட்ட கட்டுப் போட்டுக்கட்டி வைத்திருக்கும். ஒரு திரையால் சொடக்குப் போடுகிற நாழி அவனை மறைத்து விட்டுத் திரையை எடுப்பார்கள். அந்த க்ஷண காலத்துக்குள் அவன் எப்படியோ அத்தனை கட்டுக்களையும் அவிழ்த்துவிட்டு அந்தத் தூணிலிருந்து விடுபட்டு, அதோடு மட்டுமில்லாமல் இன்னொரு தூணில் அதே மாதிரி அவ்வளவு கட்டுக்களையும் போட்டுக் கொண்டு காணப்படுவான். அவனுக்கு அப்படி ஒரு தந்திரம் தெரியும். முதலில் கட்டினபோது கை. கால்களை ஒரு மாதிரி அகட்டி (அகற்றி) வைத்துக் கொண்டிருப்பான்; திரை போட்டவுடன் அவற்றைக் குறுக்கிக் கொள்வான்; உடனே கட்டுத் தளர்ந்து விடும்; அது கீழே விழுவதற்குள் மறுபடியும் அதே மாதிரி அகட்டிக் கொண்டு இன்னொரு தூணுக்குப் போய் விடுவான். இப்படித் தன் அங்கங்களைக் குறுக்கிக் கொள்வதாலேயே, அவற்றுக்கு மேலே போட்ட கட்டு விரிகிற மாதிரிதான் சாஸ்திரக் கட்டுக்களும், அகங்காரத்தை மேலேயிருந்து கட்டுவது சாஸ்திரம். நாமே உள்ளுக்குள்ளிருந்து நம்மை பக்குவப்படுத்துவதற்கே இந்தக் கட்டு, ஆசாரக்கட்டுகளைப் போட்டுக் கொண்டால் நிஜமான ஆத்ம ஸ்வதந்திரத்தை அடையலாம்.

83. புறத்தில் சுத்தி தேவை அப்போது அகசுத்தி ஏற்படும்

'எல்லோரும் அவரவருக்கு உரிய கர்ம அனுஷ்டானங்களைச் செய்ய வேண்டும்; ஆசாரங்களை அனுசரிக்க வேண்டும்! விபூதி, திருமண், ருத்ராட்சம்

Koviloor Digital Library

போன்ற சின்னங்களைத் தரிக்க வேண்டும்' என்றெல்லாம் நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சிலர் இதெல்லாம் எதற்கு என்று நினைக்கிறார்கள். 'நல்ல சீலங்களுடன் இருக்க வேண்டியதே முக்கியம். சீலம் மனசைப் பொறுத்த விஷயம். சமய ஆசாரங்களெல்லாம் வெளி விஷயம்தானே?' என்ற எண்ணுகிறார்கள்.

மிலிடரிக்காரன் என்ற யூனிஃபாரம் போடாவிட்டால் அவனுக்கு வீரம் வராதா என்று கேட்பவர்கள் கேட்கலாம். ஆனால் மிலிடரிக்காரன் என்றால் லோகம் முழுக்க அவனுக்கென்று யூனிஃபாரம் இருக்கத்தான் இருக்கிறது. அதுவே வீரத்தைத் தூண்டுகிறது என்றும் சொல்கிறார்கள்.

வெளியில் தரிக்கும் சின்னம், வெளியில் செய்கிற சம்ஸ்காரம் இவை உள்ளுக்கும் நன்மை தருவனவே ஆகும். வெறும் வேஷம் என்று நினைத்தால் வேஷமாகவே போகும். 'ஆத்மார்த்தமாக, ஜீவனைப் பரிசுத்தம் செய்து கொள்வதற்காக இந்த சம்ஸ்காரத்தைச் செய்கிறேன்; சின்னத்தை அணிகிறேன்' என்று உணர்ந்து செய்தால் சத்தியமாகவே அது உள்ளே புகுந்து சுத்தி செய்கிறது. புறத்தில் செய்வது உள்ளுக்கு உதவுகிறது.

84. பக்தியும் வாக்கும்

மிருகங்களுக்குப் பாபம் இல்லாவிட்டாலும் பயம் இருக்கிறது. எப்போது யார் தன்னைக் கொல்வார்களோ என்ற பிராண பயம் கொடிய மிருகத்துக்கும் கூட நிறைய உண்டு. மனிதனுக்கும பலவிதமான பயங்கள் உண்டு. ஆனால் பயமில்லாமல் செய்து கொள்ள மனிதனுக்கு மட்டுமே வழி இருக்கிறது. மிருகத்துக்கு இந்த வழி இல்லை. பயம் இல்லாமல் செய்து கொள்வது எப்படி? பிறவி இல்லாமல் செய்து கொண்டால்தான் பயம் இல்லாமல் இருக்கலாம். 'எல்லாம் நாம்தான்' என்கிற ஞானம் வந்துவிட்டால் எதனிடமும் பயம் இராது. அந்த ஞானத்துக்குப்பின் சாரீரம் விழுந்தால் இன்னொரு சாரீரம் எடுக்க மாட்டோம். இந்த ஞானத்தை அடைகிற மார்க்கங்கள் மனிதனுக்குத்தான் இருக்கின்றன. மிருகங்களுக்கு இல்லை. மனிதன் ஞானத்தை, அபயநிலையை, ஜன்ம நிவிருத்தியை அடையவே மகான்கள் வாக்கைப் பயன்படுத்தினார்கள். வேத, வேதாந்த. இதிஹாச, புராண, தர்ம சாஸ்திரங்கள் எல்லாம் வாக்கு இருப்பதால்தானே உண்டாயின?

பகவான் தந்திருக்கும் புத்தியால், வாக்கால் பிறருக்கோ தனக்கோ கெடுதல் உண்டாக்காமல் எவ்வளவோ நல்லது செய்யலாம். பாபமும், துக்கமும், பயமும் நீங்க வாக்கைப் பயன்படுத்தலாம். நாம் அப்படியே செய்ய வேண்டும்.

இதற்கெல்லாம் அடிப்படை பக்தி, வாக்கு தெய்வ சம்பந்தமாகப் பயனாக வேண்டும். இதனால்தான் அக்ஷராப்யாச காலத்தில், ஆரம்பிக்கும்போதே 'நமோ நாராயணாய' என்று விரலைப் பிடித்து எழுத வைக்கிறார்கள்.

Koviloor Digital Library

85. மனதை ஒருநிலைப்படுத்த தியானம்

உபவாசத்தின் அவசியம்

சுத்த உபவாசம் என்றால் முழுப் பட்டினி என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். 'உபவாசம்' என்றால் 'கூட வசிப்பது'. பகவானோடு கூட, அவனுக்குப் பக்கத்தில் ஒட்டிக்கொண்டு வசிப்பதுதான் உபவாசம். அன்றைக்கு வயிற்றில் ஒன்றையும் தள்ளாவிட்டால்தான் அப்படி அவனோடு கூட, கிட்டக்க வசிக்க முடியும். மனசு அவன் கிட்டக்கவே கிடக்க வேண்டுமானால் அதற்கு முதலில் வயிறு வெறுமனே கிடக்கணும். சாப்பிட்டால் வயிற்றிலே 'கடா புடா'. வேலை செய்ய முடிவதில்லை. மனசையும் எதிலேயும் நிறுத்த முடிவதில்லை. வயிறு அடைசலில்லாமலிருந்தால்தான் நன்றாகப் பிராணாயாமம் பண்ணி மனசை சுத்தி செய்து கொண்டு ஒரு முகமாக நிறுத்த முடியும். பெரிசாக மூச்சடக்கிக் கும்பகம் பண்ண வேண்டுமென்றில்லாவிட்டாலும், தடைப்படாமல் தீர்க்கமாக சுவாசம் விடும்படியிருந்தால்தான் மனசு தியானத்தில் நிற்கும். வயிற்றில் கனம் இருந்தால் இப்படி ஃப்ரீயாக சுவாசிக்க முடிவதில்லை. இதற்காகத்தான் உடம்பை நெற்றுப்போல் ஆக்கிக் கொண்டு ஆதனால் சுவாசத்தை ஃப்ரீயாகவும் மனசை லைட்டாகவும் பண்ணிக்கொண்சு நன்றாக ஈஸ்வர தியானத்தில் ஈடுபடும் பொருட்டு எப்போதுமே ஆகாரத்தை லகுவாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், பக்ஷத்துக்கு ஒரு நாள் சுத்தோபவாசம் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் சாஸ்திரம் விதிக்கிறது.

86. கடவுளின் உருவ அருவ நிலைகள்

கடவுள் மகாசக்தி படைத்தவர் மட்டுமல்ல; பரம காருண்யமும் பொருந்தியவர். கடவுள் இல்லை என்று வாதம் செய்பவர்களுடன் தம்மை நிரூபித்துக் கொள்வதற்காக அவர் உருவம் எடுத்துக் கொண்டு வரமாட்டார்; கடவுள் உண்டு. அவரை அனுபவிக்க வேண்டும் என்று தாபத்துடன் வேண்டுபவர்களிடம் கருணை கொண்டு அவர்களுக்கே உருவத்துடன் காட்சி தருவார். அருவாயினும் உருவம் கொள்வார். மின்சாரம் ஒயரில் வருகிறபோது அருவமாயிருந்தாலும், காற்றடக்கமான ஒரு கண்ணாடிச் சிமிழும் (Bulb) அதனுள் ஒரு சிறு கம்பியும் (filament) சேர்த்து, ஸ்விட்சைப் போட்டால், அருவ மின்சாரமே ஜோதிரூபமாகிறதல்லவா? பக்தர்கள் தங்கள் இதயச்சிமிழில், பக்தி என்ற கம்பியைப் பூட்டிக் கொண்டு சிரத்தை என்கிற ஸ்விட்சைத் தட்டி விட்டுக் கொண்டால், அருவமான கடவுள் திவ்யமங்கள ஜோதியாகத் தரிசனம் தருவார். சூரிய வெப்பத்தில் கடல்நீர் ஆவியாகப் போகும்போது அருவமாகி விடுகிறது. அதுவே மேகமாகக் குளிர்ந்தால், நம் கண்ணுக்குத் தெரிகிற மழையாகிறது. இன்னமும் குளிர்ந்தால் கெட்டியான பனிக்கட்டியாக ஆகிறது. நம் இதயம் எத்தனைக்கெத்தனை குளிர்ந்து, ஈஸ்வரனை ஸ்மரிக்கிறதோ, அத்தனைக்கத்தனை ஸ்தூலமாக அருவ தத்துவம் உருவம் கொள்கிறது.

Koviloor Digital Library

87. உண்மையான மதம் ஆனந்த நிலையை அடையச் செய்யும்

இன்பத்தை இப்போதே விட்டுவிடு என்றால் முடியமாட்டேன் என்கிறது. அதை அடியோடு விடாமல், கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்தித் தரவும். பிறகு படிப்படியாகச் சிற்றின்பத்திலிருந்து பேரின்பத்திற்கு அழைத்துச் செல்லவுமே, மதம் என்பது ஏற்பட்டிருக்கிறது. முதலில் இதுதான் அறம் என்று சொல்லி, அதைச் செய்வதற்காகவே எப்படிப் பொருள் ஈட்ட வேண்டுமோ, அந்த நியாயமான முறையைச் சொல்லி, அதனால் இன்னின்ன இன்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று பக்குவம் வருகிற வரையில் கிரமப்படுத்தக் கொடுத்து அப்புறம் இந்தச் சின்னச் சின்ன இன்பங்களையெல்லாம் தொலைத்து, நிரந்தர இன்பமான வீடு என்கிற மோக்ஷத்தை காட்டுவதே மதம்.

பந்தத்திலிருந்து விடுதலை பெற்று, ஆத்மா பூரண சுதந்திரத்துடன் எந்நாளும் ஆனந்தமாக இருக்கிற நிலையே மோக்ஷம். இதை நமக்குக் கிட்டச் செய்வதற்கே மதம் என்பது ஏற்பட்டிருக்கிறது.

88. சரித்திரம் கற்று நல்லவைகளை கடைபிடிக்கவேண்டும்

நடைமுறையில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிற சரித்திரத்தைப் பார்த்து, யாராவது எந்தப் படிப்பினையாவது பெறுகிறார்களா என்று பார்த்தால் அதுதான் இல்லை. செங்கிஸ்கான், தைமூர், கஜினி, மாலிக்காஃபூர் போலப் பலபேர் அவ்வப்போது தோன்றி தேசங்களைச் சூறையாடி ஹதாஹதம் செய்திருக்கிறார்கள் என்று சரித்திரத்திலிருந்து தெரிகிறது. தெரிந்து கொண்டதால் மட்டும் இப்படிப்பட்ட வெறிப்போக்குகளை நிறுத்த முடிந்திருக்கிறதா என்ன? இவர்கள் மாதிரியே ஒரு ஹிட்லரும், முஸோலினியும் வந்து மறுபடி ஹதாஹதம் செய்கிறார்கள் இன்னும் கிட்டத்தில் பிரத்யக்ஷமாகவே பார்க்கிறோம் - ஒரு லஞ்சம், 'கரப்ஷன்', வேண்டியவர்களுக்குப் பட்சபாதம் காட்டுவது, வேலை கொடுப்பது என்றெல்லாம் ஒரு ராஜாங்கத்தார் பண்ணினால் அதற்கு ஜனங்களின் ஆதரவு போய்விடுகிறது என்று எலெக்ஷனில் தெரிகிறது. ஆனால் படிப்பினை ஒன்றும் பெற்றதாகத் தெரியக் காணோம். அதே தோஷங்களை இவர்களும் செய்வதாக ஏற்பட்டு, அடுத்த எலெக்ஷனில் அதே கதி இவர்களுக்கும் உண்டாகிறது. ஆகையால் History repeats itself, என்று தெரிந்து கொண்டாலும் அதிலிருந்து நல்ல பாடம் எதையும் நாம் கற்றுக்கொண்டு விடுவதில்லை என்று தெரிகிறது.

89. தர்மம் செய்ய சிக்கன வாழ்வு தேவை

சிக்கனமாயிருந்தாலொழிய, இப்போது இருக்கிற போக, போக்ய இழுப்பில் எவனுக்குமே மிச்சம் பிடிக்க முடியாது. அதனால் சிக்கன வாழ்க்கை நடத்தினால்தான் 'தனக்கு மிஞ்சி' தர்மம் பண்ண முடியும். அதாவது எவ்வளவு சிக்கனமாக இருக்க முடியுமோ அப்படி இருந்து, தனக்கு மிஞ்சும்படியாகப் பண்ணிக் கொண்டு தர்மம் பண்ணணும்.

Koviloor Digital Library

கீதை முதல் ஸ்லோகத்தில் வருகிற தர்ம க்ஷேத்ரம் என்பது இந்த சரீரம்தான். இந்தச் சரீரவயலில் தர்மப்பயிரை வளர்த்து தர்ம க்ஷேத்ரமாக்க வேண்டும். அந்தப் பயிரை வளரவொட்டாமல் ஹானி செய்கிற களைதான் தனக்காக அவசியத்துக்கு மீறிச் செலவழிப்பது. வயல்நிறையக் களை மண்டியிருப்பதைப் பார்த்து, நன்றாக விளைந்திருப்பதாக சந்தோஷப்படுவது போலத்தான். தனக்காகச் செலவழித்து அதில் ஏற்படும் சௌகர்யங்களைப் பார்த்து சந்தோஷிப்பது. களை பிடுங்குவதில் எத்தனை கவனமாயிருக்கிறோமோ அத்தனை கவனமாக அத்யாவசித்திற்கு மேலான செலவுகளைப் பிடுங்கிப் போடவேண்டும்.

90. 'தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம்'

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற நாலில் தர்மத்துக்கு அடுத்து அர்த்தம். 'அர்த்தம்' என்பதற்கு இங்கே அர்த்தம், நடைமுறை வாழ்க்கை நடத்துவதற்குப் பிரயோஜனமாகிற பொருட்கள் என்பதே. வாழ்க்கை நடப்பதற்கு வீடு. வஸ்திரம், ஆகாரதானியம் முதலிய என்னவெல்லாம் வாங்குகிறோமா அவையெல்லாம் 'அர்த்தத்' தில் சேர்ந்தவைதான். இப்படி வாங்குவதற்காக நாம் சம்பாதிக்கிற பணத்துக்கும் 'அர்த்தம்' என்று பெயர். நடைமுறை வாழ்க்கை வாழ்ந்து என்றைக்கோ ஒருநாள் செத்துப்போய் விட்டு, மறுபடி இதே மாதிரி பிறந்து கொண்டிருப்பதற்கே இந்த 'அர்த்தம்' என்று ஆக்கிக்கொண்டுவிட்டோமானால், அப்போது அது அனர்த்தந்தான். 'அர்த்தம் அனர்த்தம் பாவய நித்யம்' என்பதாக இந்த உண்மையைத்தான் நினைவூட்டிக் கொள்ளும்படி ஆசார்யாள் 'பஜகோவிந்த' த்தில் உபதேசித்திருக்கிறார். இதில்லாவிட்டால் வாழ முடியவில்லை; ஆத்மாவை, பரமாத்வாவைத் தெரிந்து கொள்வதற்காக எல்லாரும் சந்நியாஸியாகப் போய்விட்டால் யார் அவர்களுக்கு பிக்ஷை பண்ணுவது? அதனால் சம்பாதித்துதான் ஆக வேண்டும் என்பதற்காகவே 'அர்த்த' த்தில் ஈடுபடவேண்டும். சாதாரண மனுஷ்யர்களாக இருக்கப்பட்டவர்கள் எல்லாருக்கும் இருக்கக்கூடிய சில ஆசைகளையும் மிஞ்சிப் போகும்படி விடாமல், அந்த அந்த ஆசைகளின் பூர்த்திக்காகவும் 'அர்த்த' த்தை நாடிச் சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும். இங்கே 'அர்த்தம்' என்பது அதற்கு அடுத்ததாக வரும் 'காம' த்துடன் சேர்கிறது. ஆனால், அதோடேயே நின்றுவிடக் கூடாது; முடிவாக உள்ள புருஷார்த்தமான 'மோக்ஷ' த்தை மறந்து 'அர்த்தம்' என்பதிலேயே தலைதெறிக்கப் போய் விழப்படாது. எனவே இதற்கெல்லாம் அடிப்படையாக முதலில் வரும் 'தர்ம' த்தில் ஆரம்பத்திலிருந்தே பிடிப்பு இருக்க வேண்டும்.

91. மனம் ஒருமுகப்பட்டு பழகுவதே யோகம்

பைத்தியங்கள் என்று சிலரைக் குறிப்பிட்டு, அவர்கள் சித்த ஸ்வாதீனம் இல்லாதவர்கள் என்கிறோம். உண்மையில் நம்மில் யாருக்குமே சித்த சுவாதீனம் இல்லைதான். பைத்தியம், வாயை அடைக்காமல் பிதற்றிக் கொண்டே இருக்கிறது என்றால், நாமும் மனத்தை அடக்காமல், அது பிதற்றல் வழியில் போகத்தான் விட்டிருக்கிறோம்.

Koviloor Digital Library

நமக்கு சித்த ஸ்வாதீனம் வந்துவிட்டால் எப்படியிருக்கும் தெரியமா? எத்தனை வலி ஏற்பட்டாலும், 'வலி என்று நினைக்காதே' என்றால், மனம் வலியைப் பொருட்படுத்தாமல் இருந்துவிடும். எதிரிலே புலி வந்து உறுமினால் கூட, மனத்திடம் 'பயப்படாதே' என்றால் அது பயப்படாமல் இருக்கும். இப்போது நாம் காரணமில்லாமலே அழுது கொண்டிருக்கிறோம். மனசு வசப்பட்டுவிட்டாலோ, அழுகைக்குக் காரணமாக எத்தனை துக்கம் வந்தாலும்கூட, அது சிரித்துக் கொண்டிருக்கும். ஆத்திர மூட்டும்படி என்ன நடந்தாலும், அது கோபமே இல்லாமல் சாந்தமாய் இருக்கும்.

முதலில் மனசை இப்படி அப்படிப் போகாமல் நல்ல விஷயத்தில் நினைவைச் செலுத்தும்படி செய்ய வேண்டும். எண்ணெயை விட்டால் அது எப்படி பிசிர் இல்லாமல் ஒரே இழையாக விழுகிறதோ - இதைத் 'தைலதாரை' என்பார்கள். அது மாதிரி மனம், நல்ல நினைவில் ஒருமுகப்பட்டுச் செல்ல வேண்டும். 'ஸ்வாமி', ஸவாமி என்ற நல்ல வஸ்துவை அப்படியே நினைத்துக் கொண்டிருக்கும்படி, மனத்தை அப்பியாசப்படுத்த வேண்டும் அதன் பிறகு, 'நினைக்கிறோம்'என்பதும் போய், ஸ்வாமியிலேயே கரைந்து, ஸ்வாமியாகவே அகி விடுவோம்.

இப்படி மனசை அடக்குவதுதான் 'யோகம்' என்பது.

92. உண்மை மௌனம் அடையப் பெற்றால்

சிவனும் நாமும் ஒன்றே

மௌனம் என்றால் எந்த விதத்திலும் அபிப்பிராயம் தெரிவிக்காமல் இருக்க வேண்டும். வாயை மட்டும் மூடிக்கொண்டு ஏதாவது ஜாடை காட்டித் தெரிவித்துக் கொண்டிருந்தால் பிரயோஜனமில்லை. அவசியமானதற்கு மட்டும் எழுதி வேண்டுமானால் காட்டலாம். 'காஷ்டமௌனம்' என்று மரக்கட்டை மாதிரி இருப்பதாக ஸங்கல்பித்துக் கொண்ட சமயங்களில் நிச்சயமாக ஜாடை காட்டுவது எழுதிக் காட்டுவது எதுவுமே கூடாது.

ஆரம்பத்தில் எல்லாக் காரியத்தையும், எண்ண ஓட்டத்தையும் விட்டு மௌனமாயிருப்பதென்றால் முடியாதுதான். என்ன ஜாடை காட்டினாலும், எழுதினாலும் பேசுகிற அளவுக்கு வளவளப்பும் வருவதாகவும் இருக்காதல்லவா? சதா அரித்துக் கொண்டிருக்கிற நாக்கை எப்படியும் அன்றைக்குக் கட்டிப்போடுகிறோமல்லாவா? அந்த மட்டுக்கும் நல்லதுதான். இப்படி ஆரம்பித்து, அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்த ஆட்டங்களை விட்டுவிட்டு, மௌனம் என்றால் மனசுக்குப் பரமசாந்தி என்று ஆக்கிக் கொண்டு, அப்படியே அலையில்லாத சமுத்திரம் மாதிரி ஆகிவிட வேண்டும். குறைபாட்டுடனாவது ஏதோ ஒரு இடத்தில் ஆரம்பித்துவிட வேண்டும். அப்யாசத்தினால் குறைகள் குறைந்து கொண்டே போய் பூர்ணநிலை வரும்; நிஜ மௌனம் சித்திக்கும்.

Koviloor Digital Library

இப்போது ஆரம்பிக்கிற மௌனம் ஈஸ்வர ஆராதனைக்கு ஒரு சாதனம். பிற்பாடு பூர்த்தி ஸ்தானத்தில் அந்த மௌனமே 'ஈஸ்வரன் வேறேயாக இல்லை, அவனுக்குத் தனியாக ஆராதனை என்று பண்ண வேண்டியதில்லை' என்ற சாத்ய லட்சியமாக நிஜ ரூபத்தில் பிரகாசிக்கும். வாய் பேசவில்லை என்பது மட்டுமன்றி, கண் பார்க்கவில்லை, காது கேட்கவில்லை, எல்லாவற்றுக்கும் மேலே, மனசில் ஒரு எண்ணங்கூட எழும்பவில்லை என்று ஆகிவிடுவதுதான் நிஜ மௌனம்.

93. பூ - பிஞ்சு, காய், பழமாவது போல அன்பு இருந்தால் மோக்ஷம் தானாக வரும்

ஒரு மரத்திலே, புஷ்பத்திலிருந்துதான் காயும், பழமும் உண்டாகின்றது. புஷ்பமாக இருக்கும்போது மூக்குக்கும், பழமாக இருக்கும்போது நாக்குக்கும் ரசமாக இருக்கின்றன. பழம் நல்ல மதுரமாக (இனிப்பாக) இருக்கிறது. இந்த மதுரம் வருவதற்கு முன்பு எப்படி இருந்தது? பூவில் கசப்பாகவும், பிஞ்சில் துவர்ப்பாகவும், காயில் புளிப்பாகவும், பிறகு மதுரமாகவும் ஆகிறது. மதுரம் என்பதுதான் சாந்தம். சாந்தம் வந்தால், எல்லாப் பற்றும் போய்விடுகிறது.

பழத்தில் மதுரம் நிரம்பிய உடனே கீழே விழுந்து விடுகிறது. அதுபோல் இருதயத்தில் எல்லா இடத்திலும் மதுரம் வந்துவிட்டால், தானாகவே எல்லாப் பற்றும் போய்விடும். புளிப்பு இருக்கும் வரை பற்று இருக்கும். அப்போது காயைப் பறித்தால், காம்பில் ஜலம் வரும்; காயிலும் ஜலம் வரும். ஆதாவது மரமும் காயை விட்டுவிட விரும்பவில்லை. ஆனால் நிறைந்த மதுரமாக ஆகிவிட்டால், தானாகவே பற்றும் போய்விடும்; பழம் தானே இற்று விழுந்து விடும். மரமும் பழத்தை விடுகிறுத; பழமும் மரத்தை விடுகிறது. இரண்டும் ஜலம் விடாமல் அதாவது அழாமல் - ஆனந்தமாகப் பிரியும்.

படிப்படியாக வளர்ந்து, மனம் முழுவதும் மதுரமான ஒவ்வொருவனும், இப்படியே ஆனந்தமாக, சம்சார விருட்சத்திலிருந்து விடுபட்டு இருப்பான். பழமாக ஆவதற்கு முன் ஆரம்பதசையில் எப்படிப் புளிப்பும் துவர்ப்பும் வேண்டியிருக்கின்றனவோ, அதுபோல் காமம், வேகம் துடிப்பு எல்லாமும் வேண்டியவைதாம் போலிருக்கிறது.

புளிப்பு இருக்க வேண்டிய சமயத்தில், புளிக்க வேண்டும். துவர்ப்பு இருக்க வேண்டிய சமயத்தில் துவர்ப்பு இருக்கவேண்டும் ஆனாலும் அந்தந்த நிலையோடு நிற்காமல், பிஞ்சு அனவரதமும் (தொடர்ந்து) பழமாகிக்கொண்டே இருப்பதுபோல், நாமும் மேலும் மேலும் மாதுரியமான அன்பை நினைத்துக்கொண்டே இருக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால், நாமாகப் போய் மோக்ஷத்தைத் தேட வேண்டாம். எந்தக் காலத்தில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருந்தால், தானாக மோக்ஷம் என்கிப மதுரநிலை வந்துவிடும்.

Koviloor Digital Library

94. அம்பாள் கண் கொட்டாமல் நம்மை உய்விக்கிறாள்

நீண்டகால பொது நம்பிக்கைப்படி, கவிமரபுப்படி (Poetic tradition) படி, தாய் மீன் தன் கண்ணால் முட்டையைப் பாரத்துப் பார்த்தே குஞ்சு பொரித்துவிடும். அப்புறம், தன் கண் பார்வையாலேயே அதற்குப் பசியாற்றிப் போஷித்துவிடும். தாய் மீனானது இப்படி திருஷ்யியாலேயே சிசுரக்ஷணை பண்ணிவிடுகிறது என்பது ஐதீகம்.

ரூபத்தில் மட்டுமில்லாமல், திருஷ்டி மாத்திரத்தால் குழந்தைகளை ரக்ஷிக்கிற குணத்தாலும், அம்பாளின் நேத்திரம் மீனாக இருக்கிறது. அம்பாளின் குழந்தைகள் யார்? எல்லாருந்தான் எல்லாமுந்தான். ஈஸ்வரனைக்கூட அவள் குழந்தைதான் என்று ஒரு பாவத்தில், தத்வார்த்தமாக சொல்லியிருக்கிறது. புல் பூண்டிலிருந்து ஆரம்பித்து பிரம்மாதிகள் வரை எல்லாவற்றையும், தன் கடாக்ஷ அம்ருதத்தால் நனைத்து நனைத்தே உய்விக்கிற பரம கருணையுள்ள லோக ஜனனிதான் மீனாக்ஷி. மீன்போல் ரூபமுள்ள அவளுடைய கண்ணின் திருஷ்டி பட்ட மாத்திரத்தில், மீன் குஞ்சுக்குத் தாயாரின் திருஷ்டியாலேயே வயிறு நிறைந்து விடுகிறது மாதிரி, நம் மனசு நிறைந்து விடுகிறுத. அவளுடைய கடாக்ஷமே ஞானப்பாலாக, உயிரை -அறிவை வளர்த்து உய்விக்க விடுகிறது.

'அநிமேஷா' - 'கண்ணைக் கொட்டாமல்' என்று 'சௌந்தர்ய லஹரி' ஸ்லோகத்தில் மீனைப் பற்றிச் சொல்லயிருக்கிறது. மீனாக்ஷியும் கண்ணைக் கொட்டுவதில்லை. கொட்டினால் அந்த fraction of a secondல் (விநாடி துளியில்), தன் கடாக்ஷாம்ருதம் குழந்தைளுக்கு இல்லாமல் போய்விடுமோ என்பதால் எப்போதும் விழிப்போடு லோகத்தை ரக்ஷித்துக் கொண்டிருக்கிறாள்.

95. இன்றையக்குத் தேவையான மருந்து - பக்தியும் சாந்தமுமே

மனிதர்கள் எவ்வளவுக்கெவ்வளவு பகவானிடத்திலிருந்தும் தர்ம நூல்களினினறும் விலகுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்றே கண்கூடாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். சயன்சின் (Science)யின் அபரிமித அபிவிருத்திக்குப் பிற்பாடு, இன்று சர்வதேசத்திலும் ஒரு தத்தளிப்பு, நிம்மதியின்மைதானே அதிகரித்திருக்கிறது? ஐம்பது வருஷத்துக்கு முன் சமுதாயத்திலிருந்த நிச்சிந்தையான, நிம்மதியான, சௌஜன்யமான வாழ்க்கை இப்போது இல்லவே இல்லை என்கிறதுதானே மிஞ்சி நிற்கிறது? அறிவுச் சக்தியோ, பௌதிக ஆற்றலோ அதிகப்பட அதிகப்பட, உலகத்துக்கு ஆபத்தும் அதிகரிக்கிறது அன்று நன்றாகத் தெரிகிறது. சரி, வியாதியைத் தெரிந்து கொண்டோம். இனி மருந்து என்ன? பக்தியும் சாந்தமுமே இவைகளுக்கு எல்லாம் உற்ற மருந்து. உண்மை பக்தியும் சாந்தமும் உலகில் பரவப்பரவ, போலீசுக்கும், நீதிமன்றங்களுக்கும், சையன்யங்களுக்கும் வேலை குறையும் இதுதான் முந்தைய ஐயாயிரம் வருஷம் காட்டுகிற உண்மை.

Koviloor Digital Library

ஆதலால் ஆட்சி மன்றத்தின் முதற் கடமை, பக்தியையும் மதச்சார்பற்றவர்கள் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிறபடியால், பக்திப் பிரசாரம் அத்தீர்மானத்துக்கு மாறுபட்டதாகி விடுமே என்று சந்தேகித்து, இவ்வழி திரும்பாமலிருக்கிறார்கள். மதச்சார்பின்மை என்றால், ஒரு மதத்தை மட்டும் சாராமல், எல்லா மதங்களையும் வளர்ப்பது என்று வைத்துக்கொள்ளாமல், எந்த மதத்தையுமே வளர்ப்பதில்லை என்று அர்த்தம் பண்ணிக்கொண்டிருப்பதால் ஏற்பட்ட விளைவு இது.

96. இறுதியில் சௌக்கியத்தைத் தருவது தர்மமே

பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றுக்கும் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற நியதி இருக்கிறது. அப்படி அவை நியதிப்படி நடப்பதால்தான், உலக வாழ்க்கை நடக்க முடிகிறது. இல்லாவிட்டால் எல்லாம் தறிகெட்டுப் போய்விடும். அதாவது லோகத்திலுள்ள சமஸ்த ஜீவராசிகளும் சௌக்கியமாக வாழ வேண்டும் என்கிற அன்பான எண்ணத்திலேயே, அவை ஒன்றோடொன்று ஒத்துப் போவதற்காக, இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு தர்மம், நியதி(law) ஈஸ்வரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தன் குழந்தைகளை வெயில் படாமல் மழை படாமல் காப்பாற்ற வேண்டும். அவர்களுக்கு இளவெயிலின் வெப்பம் தேவையாயிருக்கிறபோது அதைத் தந்து அரவணைக்க வேண்டும் என்கிற அன்பு ஈஸ்வரனுக்கு இருப்பதால், அதற்கு அனுசரணையாக இயற்கையை நடத்தி வைத்து, மரங்களுக்கு ஒரு நியதியை— தர்மத்தை தந்திருக்கிறார்.

இந்த அன்பைப் பெற நமக்கு யோக்யதாம்சம் வேண்டாமா? வேண்டும். மரத்துக்கும் மட்டைக்கும் இருக்கிற நியதி நமக்கு உண்டு. லோக க்ஷேமத்துக்காக அதை நாம் நடத்திக் காட்டுகிறபோதுதான், ஈஸ்வரனின் அன்பைப் பெற பாத்தியதை கேட்கலாம். மனிதனுக்காக உள்ள இந்த நியதிக்கே தர்மம் என்று பெயர். இந்த நியதியை மீறவும் மனிதனுக்கு மூளையைத் தந்து, ஸ்வாமி விளையாட்டுப் பார்க்கிறார். அந்த மூளையை வைத்துக் கொண்டு இவனும் எதையெதையோ சௌக்கியமாக நினைத்துக் கொண்டு, அவற்றுக்காக அலைகிறான்; இவன் தனக்கான தர்மத்தையும் மீறுகிறான். ஆனால், இறுதியில் சௌக்கியத்தைத் தருவது தர்மமே.

97. தியானம் செய்ய வடக்கு பார்ப்பது நல்லது

வாழாது வாழ்ந்தாலும், வடக்கே தலைவைத்துப் படுக்க கூடாது என்பார்கள். இதெல்லாம் சுத்த மூட நம்பிக்கை என்று இருபது வருஷம் முந்திச் சொல்லி வந்தார்கள். இப்போதோ, 'மனுஷ்ய சரீரத்தில் எலெக்ட்ரோ மாக்னடிக் வேவ்களுக்கு (மின்காந்த) மூலஸ்தானம், brain (மூளை)தான். உலகத்தை எடுத்துக்கொண்டால், அதன் மாக்னடிக்ஃபீல்டின் (காந்த சக்தியின்) மூலஸ்தானம் (North pole)(வடதுருவம்). ஆகையால் நம் தலையை வடக்குப் பக்கம் வைத்துப் படுத்துக் கொண்டால், மூளையின் சின்ன காந்த சக்தியும், துருவத்தின் பெரிய காந்த சக்தியும் ஒன்றுக்கொன்று 'க்ளாஷ்' ஆகி, மூளை பாதிப்புக்கு ஆளாகிவிடும்'என்று சயன்டிஸ்டுகள் சொல்கிறார்கள்.

Koviloor Digital Library

அதே சமயம் ஜபம், தியானம் பண்ண, வடக்கு பார்த்து உட்காருவது நல்லதென்று சொல்லியிருக்கிறது. (தூக்கத்தில் புத்தியும், மனசும் நமக்கு வசப்படாமல், நம்மையும் மீறி தூக்கம் நம்மை வசப்படுத்தி, ஒய்ச்சலில் அடித்துப் போகிறது. அப்போது புத்தி களைத்துக் கிடக்கிறது; அல்லது நம் வசத்திலில்லாததால், கன்னாபின்னா என்று கனவுகளைக் கல்பித்துக் கொள்கிறது. இம்மாதிரி சமயத்தில் இந்தச் சின்ன மாக்னெட்டை(காந்தத்தை) லோகத்தின் பெரிய மாக்னெட்டுக்கு நேரேபிடித்தால் தாறுமாறாய்ப் போய்விடும்). ஆனால் ஜப, தியான காலத்தில் நாம் மனசை அப்படியே அடக்கி வசப்படுத்த முடியாதவர்களாயிருந்தாலும்கூட, அப்படிப்பண்ண வேண்டும் என்ற லக்ஷ்யமாவது நமக்கு இருக்கிறது.

ஈஸ்வரன், விஞ்ஞானக் கருவிகளுக்கு த்ருஷ்டமாயுள்ள மின்சார காந்த சக்தியாய் மட்டுமில்லாமல், நம் லக்ஷ்யத்தைத் தெரிந்துகொண்டு, அதற்கு அருள் செய்கிறவனாகவும் இருப்பதால், தியான காலத்தில் அதே காந்த சக்தி நமக்கு நல்ல பவரைக் கொடுக்கும்படிச் செய்கிறான். ஷாக் அடிக்கிற எலெக்டிரிக் சக்தியைக் கொண்டே, நாம் எத்தனையோ நல்லதைப் பெறவில்லையா?

98. அரசாங்கத்தார் மக்களின் நன்மை, சத்யம், தர்மம் யாவும் கடைபிடிக்கவேண்டும்

தற்காலத்தில் சிலர் நினைக்கிற மாதிரி சாணக்ய தந்திரம் முதலானவற்றில் ஜனங்களின் நன்மையையும், சத்யம் தர்மம் ஆகியவற்றையும் புறக்கணித்து ராஜாங்கத்துக்கு யதேச்சாதிகாரம் கொடுத்திருக்கிறது என்று தப்பாக நினைத்து விடக்கூடாது. தற்போது உலகத்தில் 'மானார்க்கி' (முடியரசு) உள்ள நாடுகள் உள்பட எல்லா தேசங்களிலும் யதேச்சாதிகாரம் இல்லாமல் சர்வஜன அபிப்பிராயப்படி, ஸர்வஜன க்ஷேமத்துக்காகத்தான் அரசாட்சி நடத்தப்படுவதாக, ஜனநாயகக் கொள்கை என்பதாக ஒன்று பேசப்படுகிறது. ஆனாலும் தினமும் ஒரு Coup' வருவதாகவும், கொஞ்ச காலத்திலேயே இந்த ராணுவ ஆட்சியும் போய் இன்னொரு மிலிடரி சர்க்கார் வருவதாகவும் தானிருக்கிறது. ஜனங்கள் நலனை முந்தி இருந்த ராஜாங்கம் கவனிக்கவேயில்லையென்றும், ஜனப்ரதிநிதகள் என்று சொல்லப்படுபவர்கள், சத்ய தர்மங்களை அடியோடு விட்டு விட்டு லஞ்சம், கையாலாகாத்தனம் இவற்றால் தேச வாழ்க்கையைக் கெடுத்து விட்டதாகவும் புது ஆட்சியை ஏற்படுத்துபவர்கள் சொல்கிறார்கள். இப்போத நடக்கிற இத்தனை யதேச்சாதிகாரமோ, இப்போது பார்கிற இத்தனை inefficiency யோ அர்த்தசாஸ்திரங்களில் அனுமதிக்கப்படவேயில்லை. இப்போது வாயினால் உசந்த ப்ரின்ஸிபில்களைச் சொல்லிக்கொண்டே கார்யத்தில் ரொம்பவும் வேறுவிதமாகச் செய்வதாய் இருக்கிறது. அர்த்தசாஸ்திரங்களில், இப்படி வாயினால் ஓரேடியாக தர்மஜோடனை பண்ணாமல், ஒரு ராஜாங்கம் நடத்துவதென்றால் அதில் ஒரு ராஜ்யத்தையே மேய்த்துக் கட்ட வேண்டியிருப்பதை முன்னிட்டும், மேலும் அந்நிய ராஜ்யங்களின் மோதல்களைச் சமாளிக்க வேண்டியிருப்பதை முன்னிட்டும், அநேக

Koviloor Digital Library

விஷயங்களை ரகஸ்யமாகத்தான் வைத்திருக்க வேண்டும். சில விஷயங்களைக் கொஞ்சம் வேறே மாதிரித் தெரிகிற மாதிரிதான் காட்ட வேண்டும் என்ற Practical necessityயால், ரொம்பவும் சத்யதர்மம் பார்த்து முடியாது என்றே சில அம்சங்களில் காம்ப்ரமைஸ் பண்ணிக்கொண்டு போகும்படியாகச் சொல்லியிருக்கும். வார்த்தையில் ரொம்பவும் தர்மஜோடனை பண்ணாவிட்டாலும், கார்யத்தில் அதில் சொல்லியிருக்கிற அளவுக்கே ராஜாக்கள் விட்டுக் கொடுத்து ராஜ்யபாரம் பண்ணினதால், இக்காலத்தில் கார்யத்தில் நடக்கிற அதர்மமும் யதேச்சாதிகாரமும் அப்போதெல்லாம் நடந்தேயில்லை.

99. சிறு வயதிலேயே வழிபாடு முறைகளை கற்றுத்தர வேண்டும்

'எல்லோரும் வைதிகமாயிரு என்றால் இந்தக் காலத்தின் போக்கில் நடக்கிற காரியமா? நடக்காததைச் சொல்லிப் பிரயோஜனம் என்ன?' என்று கேட்டால் நடக்கிற அளவுக்கு ஒன்று சொல்கிறேன். இதையாவது உடனேயே செய்ய ஆரம்பித்து விடவேண்டும்.

சமூகத்தில் ஒட்டாமல் தனியாக வைதிகர்கள் ஒரு சின்ன கோஷ்டியிருப்பதாகவும், அவர்களும் இன்ஃபீரியாரிடி காம்ப்ளெக்ஸோடு அப்படியிருப்பதாகவும் இருக்கிற ஸ்திதி மாறுவதற்கு இந்த ஒன்றைச் சொல்லுகிறேன். ஆதாவது மற்றவர்கள் முழுக்க வைதிகமாகப் போகாமல் லௌகிகமான ஸ்கூல், காலேஜ் என்றே பசங்களை விடட்டும். தாங்களும் ஆஃபிஸோ, கம்பெனியோ, சொந்த பிஸினெஸ்ஸோ (அது ரொம்பவும் துராசாரமாக இல்லாதவரையில்) என்ன தொழில் பண்ணுகிறார்களோ அப்படியே பண்ணட்டும். ஆனாலும் பசங்களை தினம் சாயந்திரம் ஒரு மணி, ஸ்நானம் பண்ணி மடிகட்டிக் கொண்டு, நெற்றிக்கு இட்டுக் கொண்டு ஒரு பொது இடத்தில் ஒன்றாகக் கூடி கொஞ்சமாவது வேதாப்யாசம் பண்ணுவதற்கும் ஸ்தோத்திரங்கள் கற்றுக் கொள்வதற்கும் ஒவ்வொரு பேட்டையிலும் ஏற்பாடு செய்ய வேண்டும் பிராமணரல்லாதாருக்கும் வேதாப்யாசம் தவிர மற்ற தினுசில் மதாபிமானம், தெய்வ பக்தி உண்டாகும்படியான ஏற்பாடுகளை பண்ணவேண்டும். நீராடுவது, நீறு பூசுவது (அல்லது திருமண் இடுவது), தேவார, திருவாசக திவ்ய பிரபந்தங்களை ஓதுவது என்று வைத்துக் கொள்ளலாம். சின்ன வயசிலிருந்தே இப்படி நம் மதானுஷ்டானங்களில் பிடிப்பை உண்டாக்கி விடவேண்டியது அவசியம். சகல ஜாதிக் குழந்தைகளுக்கும் சம்ஸ்கிருதமும் கற்றுக் கொடுத்து விடவேண்டும். அனேக சாஸ்திரங்கள் அந்த பாஷையில்தானே இருக்கின்றன? ஆனபடியால் நம் சாஸ்திரங்களைப் பார்த்து அதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ளக்கூடிய பாஷாஞானத்தை நம் மதத்துக்குழந்தைகள் எல்லோருக்கும் உண்டாக்கிவிட வேண்டும்.

Koviloor Digital Library

100. நமஸ்கார தத்துவம்

'நமஸ்காரம் செய்வதைத் தண்டம் சமர்பித்தல் என்பார்கள். தண்டம் என்றால் கழி அல்லது கோல் என்று அர்த்தம். கையில் பிடித்திருக்கிற ஒரு கோலை விட்டுவிட்டால், அது அப்படியே தடாலென்று கீழே விழுந்து விடும். அப்படியே இந்தச் சரீரத்தை நமதல்ல; இது ஈஸ்வரனுடையது என்கிற எண்ணத்துடன் கீழே போடுவதுதான் நமஸ்காரம். நம் சரீரம் வெறும் மரக்கோல்தான். உதவாத பொருளை 'அது தண்டமாகி விட்டது' என்கிறோம். அப்படி தண்டமான வஸ்து தான் நம் சரீரம். இதைத் தூக்கிப் பிடித்து நிறுத்தி வைத்து ஆட்டுகிற சக்தி ஈஸ்வரன் கொடுத்ததே ஆகும். இந்த உடம்பை சந்நிதியிலாவது அப்படி பாவித்து வணங்கித் தரையோடு தரையாக, எளிமையாக்க் கிடக்க வேண்டும். இங்கே வணங்கிவிட்டால், அப்புறம் வெளியே எங்கேயும் வணங்காமல் இருக்கலாம். ஏதோ நாமே தாங்கி நடத்துகிறோம் என்ற எண்ணத்தை ஒழித்துவிட்டு அதாவது அகங்காரத்தை விலக்கி விட்டு அதற்கு அடையாளமாக, ஈஸ்வரன் முன் இந்தச் சரீரத்தைக் கீழே போடவேண்டும். அதுதான் தண்டம் சமர்ப்பிப்பது. ஜுரம் வந்தால் நம் சரீரத்தால் நிற்கவும் நடக்கவும் முடிகிறதில்லை. இந்த ஜன்மாவே பெரிய ஜுரமாக வந்திருக்கிறது. இதிலிருந்து நம்மைக் கடைத்தேற்றுவதற்காக, நமக்கு வந்திருக்கிற சம்சார ஜுரத்தைப் புரிந்து கொண்டு அதற்கு அடையாளமாக ஸ்வாமியின் முன் தண்டாகாரமாக விழுந்து நமஸ்கரிக்க வேண்டும்.

'நாம் செய்கிறோம்' என்கிற எண்ணம் போய்விட்டால், அதுவே சதாகால நமஸ்காரம். அந்த அனுபவம் நமக்குச் சித்திக்காத போதிலும் ஈஸ்வர 'பொறுப்பை உன்னிடமே பூரணமாகப் போட்டேன்' என்பதற்கு அடையாளம் சரீரத்தைத் தரையில் போடுவது. கொஞ்சம் பொறுப்பை நமக்கு என்று வைத்துக் கொண்டால் கூட ஸ்வாமி தம் பங்கைக் குறைத்துக் கொண்டுவிடுவார். இதில் அரைகுறைக்கு இடமே இல்லை. நம்முடைய நல்லது பொல்லாதது அவ்வளவும் அவர் விட்டபடி என்று சகலபொறுப்பையும் உடம்பைத் தரையில் தள்ளி நமஸ்காரம் பண்ண வேண்டும். அப்படிச் செய்தால் நம்பாரம் பண்ண வேண்டும். அப்படிச் செய்தால் நம்பாரம் அனைத்தையும் கிருபாசமுத்திரமான ஸ்வாமியே ஏற்று அனுக்கிரப்பார்.

101. நமக்கு குறையே இல்லை ஆனந்தமே

மனுஷ்யன் உள்ளுக்குள், தானே ஆனந்த ஸ்வரூபம்
நமக்கு குறையே இல்லை
நமக்குள் நாமே பூரண வஸ்து
வெளியிலே இருக்கிற அத்தனை ஆனந்தமும்
நமக்குள்ளேயே அடக்கம்.

கோவிலூர் ஆதீனம்
1993
R65
507

Koviloor Digital Library

மணமக்களுடன் எங்களையும் வாழ்த்திய அனைவருக்கும் நன்றி

அழ.சி. அன்னபூரணி ஆச்சி

தி. சிங்காரம் B.Com.
தி. சாந்தி B.Com.

☆

தி. மாணிக்கம் B.E.
மா. தெய்வானை B.Sc.

கா. அன்னபூரணி B.Com., D.C.S.
அண. காசி B.Tech., M.B.A., M.S.
- செவ்வூர் (CHICAGO, USA)

Koviloor Digital Library

மணமக்களை வாழ்த்திய அனைவருக்கும் நன்றி

AL. S.T. & Co.
ALS. டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

G.I. & M.S., ஸ்டீல் பைப்
ஆனந்த் அசாகி தண்ணீர் மீட்டர்
பினோலக்ஸ் & மற்ற பி.வி.சி. பைப்
கானாபிளக்ஸ் ஒஸ்
ELGI கம்பெனி HDPE பைப்
பைப் பிட்டிங்ஸ்

மொத்தம் & சில்லரை வியாபாரம்

	போன்
(H.O.) 'அருணோதயம்'	43006
6, டாடாபாட் 6-வது வீதி, கோவை - 12	43191

கிளைகள்

43, செம்புதாஸ் தெரு, (2 வது மாடி) சென்னை - 1	5230177
	5223527
1018, அவினாசி ரோடு, கோவை - 18	31388
72, சி. சி. ரோடு, சேலம் - 1	66117
640, ராணிப்பேட்டை மெயின் ரோடு, ஆத்தூர் (சேலம்)	6341
195, நேருஜி ரோடு, விழுப்புரம் - 2	3192
845, மதுரை ரோடு, தேனி	72986

AL.S. தியாகராஜன் செட்டியார் B.Com.